Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

இலவச பிரதி

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-19 | 04-09-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-199


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
உரிமையாளர்:-
S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

# நுழைவாயில் இராணுவக் காவலரண்களில்

# கண்காணிப்புக் குழுவினரை நிறுத்துக

## போ. நி.க. குழுவிடம் இளந்திரையன் கோரிக்கை

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்லும் நுழைவாயில்களில் உள்ள இராணுவக் காவலரண்களில் நிரந்தரமான கண்காணிப்பாளரை நிறுத்த வேண்டுமென விடுதலைப்புலிகள் வலியுறுத்தியுள்ளனர். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருடன் நேற்று கொக்கட்டிச்சோலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அவசர சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.**



மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையனுக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமை அதிகாரி மைக்சொரன், மட்டக்களப்பு மாவட்ட துணைத் தலைமைப் பணிப்பாளர் டொமிலெக் மியர் ,அவரின் அலுவலக அதிகாரி, மட்டக்களப்பு மாவட்ட கண்காணிப்புக் குழுவின் பதில் பணிப்பாளர் எலிசபெத் ஆகியோருக்கும் இடையில் இச்சந்திப்பு நேற்றுக் காலை 8.00 மணிக்கு நடைபெற்றது. இதில் மட்டக்களப்பு மாவட்ட சமாதான இணைப்பாளர் மனோஜ் கலந்து கொண்டார். இச்சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் சீன விஜயத்தில் 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சீனப் பயணத்தில் எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.சிறிலங்கா சனாதிபதியின் சீனப் பயண நிறைவு நாளான நேற்று முன்தினம் இருநாட்டு சனாதிபதிகளும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில், சீனத் தலைவரின் அழைப்பின் பேரில் சிறிலங்கா சனாதிபதி மேற்கொண்ட சீனப் பயணத்தில் இரு நாட்டு அரச சனாதிபதிகளும் உத்தியோகபூர்வ பேச்சுக்களை மேற்கொண்டதாகவும் இருநாடுகளின் அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் வெளிப்படையாக நல்லெண்ணத்துடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜபக்ஷவின் கூட்டத்தில் தமிழ்ப்பெண் கைது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நடாத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடியதாகத் தமிழ்ப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புத்தளம் ஆனமடுவ பிரதேசத்தில் மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தபோது இந்தத் தமிழ்ப்பெண் கைது செய்யப்பட்டதாகச் சிறிலங்கா பொலிசார் தெரிவித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியிலிருந்து யாழ்.சென்ற இரு போராளிகள் முகமாலையில் கைது

கிளிநொச்சியிலிருந்து யாழ்.சென்ற இரு அரசியல்துறைப் போராளிகள் நேற்று முகமாலையில் வைத்து சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கானொளி, நித்தி ஆகிய இரு போராளிகளே முகமாலையில் வைத்து காலை எட்டு மணியளவில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.பின்னர் இவ்விடயம் கண்காணிப்புக் குழுவினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து இருவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவரிடம் துப்பாக்கி ரவை ஒன்று இருந்ததாகக் கூறியே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது. அத்துடன் இவர்கள் பயணம் செய்த உந்துருளி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## க.பொ.த (உ/த) பரீட்சை முடிவுகள் வியாழனன்று வெளியாகும்

க.பொ.த உயர்தர முடிவுகளை இந்த மாதம் எட்டாம் திகதி இணையத்தளத்தில் பார்வையிடலாமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுரஎதிரிசிங்க தெரிவித்துள்ளார். எட்டாம் திகதியன்று பரீட்சை முடிவுகளை இணையத்தளத்தில் வெளியிடக்கூடியதாக பரீட்சை திணைக்களம் துரிதமாக செயலாற்றி வருகிறது என்று அவர் தெரிவித்தார். www.doenets.lk என்ற முகவரியில் பரீட்சை முடிவுகளை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் ஒரு சில நாட்களின் பின்னர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கொழும்பிலுள்ள பாடசாலைகள் எட்டாம் திகதியன்று பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து முடிவுகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய பாடசாலைகளுக்கான பரீட்சை முடிவுகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

## திருவுருவப் படம் இணைப்பு



**லெப். கேணல் முரளிதரன் / நிருஜன் (தர்மபாலன் கஜரூபன்) எனும் மாவீரரின் திருவுருவப்படம் இன்றைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது**

## தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தால் இரு சட்ட நூல்கள் வெளியீடு

தமிழீழ சட்டவாக்கச்செயலகத்தால் இரு சட்டநூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தமிழீழ பேணுகைச்சட்டம், தமிழீழ சட்டக்கோவையின் திருத்தச்சட்டம் ஆகியனவே கடந்த புதன் கிழமை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. சிறப்புத் தூதரை தமிழ் தேசியக் கூட்டமைப்பு சந்திக்கும்

யுத்தநிறுத்த ஒப்பந்தம் குறித்து ஆய்வு செய்ய இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா.சிறப்புத் தூதுவர் லக்டார் பிராக்மி, தமிழ் தேசியக் கூட்டமைப்புடனும் பேச்சுக்களை நடாத்தவுள்ளார்.

இப்பேச்சுக்கள் எதிர்வரும் ஆறாம் திகதி அல்லது ஏழாந் திகதி நடைபெறுமென தமிழ்தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சந்திப்பின் போது மூன்றரை ஆண்டுகால யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களின் மனிதாபிமான நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணப்படாதது. இதனால் தமிழ் மக்கள் விரக்தி நிலையில், முழு அளவில் நம்பிக்கையற்று இருப்பது, இராணுவத்தினருடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களை சிறிலங்கா அரசு உருவாக்கி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் வகையில் தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பாராளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சிசார்பில் தமிழர் போட்டி

நோர்வே பாராளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் பாராளுமன்ற வேட்பாளர் பட்டியலில் தமிழரான பாலசிங்கம் யோகராஜாவின் பெயர் இடம்பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு நோர்வே நகர சபைத் தேர்தலில் நோர்வேத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக தொழிற்கட்சி உறுப்பினரான பாலசிங்கம் யோகராஜா (பாஸ்கரன்) போட்டியிட்டு ஒஸ்லோ வாழ் தமிழ் மக்களின் அமோக ஆதரவுடன் வெற்றி பெற்றார்.

இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் தொழிற்கட்சியின் பாராளுமன்ற வேட்பாளர் பட்டியலில் பாலசிங்கம் யோகராஜாவின் பெயரும் இடம்பெற்றிருக்கின்றது. இது நோர்வே தமிழர்களின் அரசியல் பிரவேசத்தின் படிநிலை வளர்ச்சி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது பெயர் தொழிற்கட்சி வேட்பாளர் பட்டியலில் 18 ஆவது இடத்தில் இடம்பெற்றிருக்கின்றது. எனவே பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவென்ற போதும் தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவரின் பெயர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைதிப் படையை அனுப்புமாறு கொபி அனானிடம் சந்திரிகா கோரிக்கை

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்புமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சீனாவிற்கான பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தை தொலைபேசியூடாக தொடர்புகொண்டபோதே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

ஐ.நா செயலாளருடன் சந்திரிகா தொடர்பு கொண்டபோது அவர் ஆபிரிக்க நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்த உரையாடலின் போது யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரை கடுமையாக விமர்சித்துள்ள சந்திரிகா, யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு பொலிஸ்துறை அதிகாரங்களைப் பயன்படுத்துமாறு தான் விடுத்த வேண்டு கோளை அவர்கள் நிராகரித்து விட்டார்கள் எனத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

அதனால் ஐக்கிய நாடுகள் சபையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**அறிவித்தல்**

கிளி/தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற வீட்டு மின்இணைப்பு (வயறிங்) இறுதிப்பரீட்சை இன்று (04.09.2005) நடைபெறும்.

தகவல்:-தொழில்நுட்பக்கல்லூரி (6683)

**விற்பனைக்குண்டு**

அரிசிஆலை பாவனை இயந்திரங்களான 16Hp இயந்திரம், NO 7 கல்லா், சோமசினி, 12" கிறைண்டா்02 என்பன உடன் விற்பனைக்குண்டு.

தொடா்பு-கயற்கண்ணி அரிசி ஆலை D10 உருத்திரபுரம். (சி.6681)


# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு த.பு.கழகத்தால் மீன்பிடி உபகரணம் வழங்கல்

(முல்லைத்தீவு)

சுனாமிக்கு பின்னரான துரிதபுனா் வாழ்வு அபிவிருத்தித்திட்டத்தில் முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவா்களுக்கு ஜோ்மன், நோா்வே நாட்டினது நிதியுதவியில் தமிழா் புனா்வாழ்வுக்கழகத்தால் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணம் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு படகு கட்டுமானத்தளத்தில் வைத்து நேற்று மாலை மூன்று மணிக்கு வழங்கப்பட்டது.

முல்லை.மாவட்ட க.தொ.கூ.சங்க சமாசத்தின் தலைவா் அ.மரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை வன்னிபாராளுமன்ற உறுப்பினா் ச.கனகரத்தினம், முல்லை.மாவட்ட தமிழா் புனா்வாழ்வுக்கழகப் பணிப்பாளா் மூா்த்தி ஆகியோா் ஏற்றினாா்கள். தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் முல்லை.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா் மா.ரங்கன் ஏற்றினாா். தமிழா் புனா்வாழ்வுக்கழகக் கொடியினை சுனாமி நிவாரண திட்டப்பணிப்பாளா் றெஜி ஏற்றினாா். கருத்துரைகளைப் பாராளுமன்ற உறுப்பினா் ச.கனகரத்தினம், த.பு.க.முல்லை.மாவட்டப் பணிப்பாளா் மூா்த்தி, கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா் மா.ரங்கன், த.பு.க. சுனாமித்திட்டப் பணிப்பாளா் றெஜி ஆகியோா் வழங்கினாா்கள். தொடா்ந்து 60 பயனாளிகளுக்கு வலைகள், 50 பயனாளிகளுக்கு வெளிஇணைப்பு இயந்திரம், 15 பயனாளிகளுக்கு படகு என்பன வழங்கப்பட்டன. (20)

-வட்டக்கச்சி சிவிச்சென்ரா் வலயத்திற்குட்பட்ட-

# மாவீரா் பெற்றோா் கௌரவிப்பும் வீரமுரசு நிகழ்வும்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி சிவிச்சென்ரா் வலயத்திற்குட்பட்ட மாவீரா் பெற்றோா் கௌரவிப்பும், வீரமுரசு நிகழ்வும் வட்டக்கச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் கலைநிகழ்வுகளும், தமிழீழ மகளிா் இசைக்குழுவின் இசை நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்து மக்களையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றனா் வட்டக்கச்சி தேசிய எழுச்சிப்பேரவையினா்.

# முல்லை. மாவட்ட வைத்தியசாலை நோயாளா் விடுதி இன்று திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் நோயாளா் விடுதி இன்று பிற்பகல் மூன்று மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தா்மேந்திரா தெரிவித்துள்ளாா்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினா்களாக வன்னிபாராளுமன்ற உறுப்பினா் கனகரத்தினம், சிறப்புவிருந்தினராக முல்லை அரசஅதிபா் இமெல்டா சுகுமாரும், கௌரவவிருந்தினராக பிரதிமாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளா் வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜாவும், டாக்டா் விக்கினேஸ்வரன், கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளா் ரங்கன், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளா் முகுந்தன், கரைதுறைப்பற்று உதவிஅரசஅதிபா் சோதிநாதன், தாய் சேய் நலவைத்தியா் சுதா்சன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனா். (20)

# மடு வீதி வாகனவிபத்தில் வயோதிபா் மரணம்

(மன்னாா்)

மன்னாா்-மடுவீதியில் பயணித்துக்கொண்டிருந்த தனியாா் வாகனமும், சீரற்ற வகையில் ஓடிவந்த இராணுவ வாகனமும் ஒன்றையொன்று விலகிச் செல்ல முற்பட்டவேளை தனியாா் வாகனம் வீதியால் சென்ற பாதசாரி ஒருவரை மோதியதில் அந்த இடத்திலேயே அவா் மரணமடைந்துள்ளாா். மரணமடைந்தவா் 50 வயது மதிக்கத்தக்கவா் என்று தெரிவிக்கப்படுகின்றது.(18)

# 75 கிராம அபிவிருத்திச் சங்கங்களை மேற்பாா்வை செய்ய அதிகாரி இல்லை

## –திருமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலா்

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேசசெயலா் பிரிவில் 75 இற்கும் மேற்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் செயற்படுகின்றன. இவற்றை மேற்பாா்வை செய்வதற்கு கிராமஅபிவிருத்தி அதிகாரி கூட எமது பிரதேச செயலகத்திற்கு நியமிக்கப்படவில்லை. இவ்வாறு திருகோணமலைபட்டினமும் சூழலும் பிரதேச செயலாளா் சுந்தரம் அருமை நாயகம் தெரிவித்தாா்.

அரச நிா்வாகத்தை விட கூடுதலான அபிவிருத்திப் பணிகளில் அரசசாா்பற்ற அமைப்புக்கள் தான் இன்று ஈடுபடுகின்றன. ஆனால் சில இடங்களில் கிராமநிலை அதிகாரிகள், கிராமஅபிவிருத்திச் சங்கங்கள், அரசாங்க அதிபா் ஆகியோருக்கு தெரியாத நிலையில் தன்னாா்வ அமைப்புக்கள் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுகின்றன. அரசசாா்பற்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு மிகக்குறைவாகவே காணப்படுவதாகவும், பிரதேசசெயலாளா் தெரிவித்தாா். கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக அபிவிருத்தித்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தன்னாா்வ நிறுவனம் எதுவும் முன்வருவதாக இல்லையென்றும் பிரதேச செயலாளா் சுந்தரம் அருமைநாயம் குறிப்பிட்டாா். கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளா் வி.குமாரசிங்கம் பேசும் போது கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினா்களுக்கு பயிற்சி வழங்குவதற்கான நிலையங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் வடக்கில் அச்சுவேலியிலும், கிழக்கில் கல்லடி எனுமிடத்திலும் செயற்பட்டன. இப்போது அவை மூடப்பட்டுள்ளன என்று குறிப்பிட்டாா். கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினா்களுக்கு பயிற்சி அளிப்பது முக்கியமானதாகும் என்றும் அவா் குறிப்பிட்டாா். இப்போது கிராம அபிவிருத்திச்சங்க வளா்ச்சிக்காக 50 ஆயிரம் ரூபா மட்டுமே கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் உதவிப் பணிப்பாளா் குறிப்பிட்டாா்.

அண்மையில் நடைபெற்ற திருகோணமலை பிரதேசசெயலா் பிரிவில் உள்ள கிராமஅபிவிருத்திச் சங்கங்கள் சமாசத்தின் விசேட கூட்டத்தில் சங்கநிா்வாகிகள் தெரிவித்த முறைப்பாடுகள் குறித்து பிரதேச செயலாளரும், கிராம அபிவிருத்தி திணைக்கள உதவிப்பணிப்பாளரும் இக்கருத்துக்களை வெளியிட்டனா்.

# வீட்டுத்தோட்டப் பயிற்சி வகுப்பும் விதைபொருள் வழங்கலும்

(ஒட்டுசுட்டான்)

விவசாயத் திணைக்களமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை.மாவட்டமும் இணைந்து வீட்டுத்தோட்டத்திற்கான மரக்கறி விதை உள்ளீடுகளையும் வழங்கி பயிற்சி வகுப்புக்களையும் நடாத்தியுள்ளன.

நேற்றுக்காலை அம்பகாமம் பகுதி கிராமசேவகா் பிரிவில் விவசாய போதனாசிரியா் லக்ஸ்மன் தலைமையிலும், ஒட்டுசுட்டான் கமநல சேவையில் மாலை விவசாய போதனாசிரியா் குகானந்தன் தலைமையிலும் நடைபெற்றது. பயிற்சி வகுப்புக்களை விவசாயத்திணைக்களத்தைச் சோ்ந்த பாடவிதான உத்தியோகத்தா்கள் அ.ஜெயராஜா, ம.விஜயகுமாா் ஆகியோா் வழங்கினா்.

அம்பகாமத்தில் 50 பயனாளிகளுக்கும், ஒட்டுசுட்டான் கமநல சேவைப் பிரிவில் 55பயனாளிகளுக்கும் விதை உள்ளீடு வழங்கப்பட்டன. இதில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தா்கள் செல்வி.இராசலட்சுமி சுப்பிரமணியம், அமிா்தலிங்கம் ஆகியோரும் கலந்து கருத்துரைகளை வழங்கினா். (05)


## கரைதுறைப்பற்று பிரதேசசபை முல்லைத்தீவு

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2005

கரைதுறைப்பற்று பிரதேசசபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரரிடம் இருந்தும் உள்ளூரில் அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரரிடமிருந்தும் ஒப்பந்தவேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட பொது நிறுவனங்களிடமிருந்தும் கேள்விகள் கோரப்படுகின்றன. 2005.09.01 ஆந் திகதி தொடக்கம் 2005.09.09. ஆம் திகதி பகல் 10.00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 2005.09.09 ஆம் திகதி அன்று பிற்பகல் 1.00 மணிவரை சோ்க்கப்படலாம். அன்று பிற்பகல் 2.00 மணிக்குக் கேள்விகள் பரிசீலிக்கப்படும். கேள்வியை ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு. கேள்விகள் திறக்கப்படும் போது கேள்விகாரா் சமுகமளித்திருக்கலாம். கேள்விகள் இணைப்படிவத்தில் பூா்த்திசெய்யப்பட்டு மூலப்பிரதியை "செயலாளா் கரைதுறைப்பற்று, பிரதேசசபை, முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா் அலுவலகம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கும் அதே நாளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காகித உறையின் மேல் மூலையில் வேலையின் பெயரை எழுதி கேள்விப்பத்திரம் 2005 எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை பிரதேச சபையில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயா் | கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படக்கூடியது | கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படாதது | வரவுசெலவுத் திட்டத்தில் அறிந்துகொள்ளலாம் |
|---|---|---|---|---|
| 01 | குமுழமுனை ஆண்டான்குள பாடசாலை வீதி புனரமைப்பு | 8250.00 | 250.00 | |

(இ.கிருஷ்ணபிள்ளை),
செயலாளா்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி.12528)



## புதுக்கடை திறப்பு விழா

புதுக்குடியிருப்புச் சந்தியில் இயங்கி வந்த

**மதி உணவகம்**

05.09.2005 அன்று சுபவேளையில் இளவேனிலுக்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது என்பதனை அன்பா்கள், ஆதரவாளா்கள், வாடிக்கையாளா்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:-
உரிமையாளா்,
பணியாளா்கள்.

(சி.12672)



## தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனம்-2005.09.01 கிளிநொச்சி மாவட்டம்

மேற்படி பிரகடன நிகழ்வு எமது மாவட்டத்தில் மிகச் சிறப்புற நடைபெற்று நிறைவுபெற்றுள்ளது. இந்தத் தேசியச் செயற்பாட்டின் போது அதன் ஒவ்வொரு நிலைகளிலும் உணா்வோடும், தேசிய உரிமையோடும் பங்காற்றி தங்களின் தேசியக் கடமையை நிறைவு செய்தமைக்காக மாவட்ட தமிழ்தேசிய ஒருங்கிணைப்புச் செயலணி என்ற வகையில் உங்கள் ஒவ்வொருவரையும் மாவட்ட தமிழ்தேசிய எழுச்சிச் செயலணி நன்றியுணா்வோடு பற்றிக்கொள்கிறது.

தங்களின் தமிழ்தேசியப்பணி தொடரட்டும்

தமிழீழமே எங்கள் மூச்சு.

நன்றி

செயலாளா்,
தமிழ்தேசிய எழுச்சிச் செயலணி,
கிளிநொச்சி மாவட்டம்.

தலைவா்,
தமிழ்தேசிய எழுச்சிச் செயலணி,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.12671)

# அமெ.சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூக விரோதச் செயல்கள் அதிகரிப்பு

## -குற்றவாளிகளைக் கண்ட இடத்தில் சுட உத்தரவு-

(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் கற்றினா சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட லூசியானா, அலபாமா, மிசிசிப்பி மற்றும் ஓர்லியன்ஸ் பகுதிகளில் இடம்பெற்று வரும் பாலியல் வல்லுறவு, கொள்ளை மற்றும் சமூக விரோதச் செயல்களைப் புரிவோரை கண்ட இடத்தில்சுடப்பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.**

இந்தச் சமூக விரோதச் செயல்கள் கட்டுக்கடங்கமால் இடம்பெற்றுவதால் அரசு இந்தக் கடுமையான நடவடிக்கையை எடுக்க நேரிட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க கடலோரப் பகுதிகளான லூசியானா, அலபாமா, மிசிசிப்பி,நியூ ஓர்லியன்ஸ் உள்ளிட்ட மேற்கு புளோரிடாவில் பல இடங்கள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கானோர் பலியாகியுள்ளனர். இலட்சக்கணக்கானோர் வீடு உடைமைகளை இழந்து அகதிகளாகி உள்ளனர்.

இந்த இயற்கை பேரழிவைப் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆயுதம் ஏந்திய கொள்ளைக்காரர்கள் வீடுகளில் துணிகரமாகப் புகுந்து கொள்ளையடித்து வருகின்றனர். இதனால் பல இடங்களில் சட்டம் ஒழுங்கு சீர் கெட்டு இருக்கிறது.

இது குறித்து லூசியானா ஆளுனர் காத்தீன் பிளான்கோ நிருபர்களிடம் கூறுகையில்; புயல், மழை பாதித்த பகுதிகளில் கொள்ளை, பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அதைத் தடுக்க 300 பாதுகாப்பு படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கொள்ளையரைக் கண்டதும் சுட உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று கூறினார்.


பிணங்கள் தண்ணீரில் மிதக்கின்றன. அவற்றை மீட்புப் படையினர் படகுகளில் சென்று அப்புறப்படுத்தி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழுமையாகச்சென்றடையவில்லை நியூஓர்லியன்ஸ் நகரில் மழை வெள்ளத்தால் தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டிருக்கிறது மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன.

அமெரிக்காவில் வீசிய சூறாவளி 'கற்றினாவால்' மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் மாநிலத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்ட இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்ட அதேச சமயம் பல நாள் தாமதத்திற்குப் பின்னர் அவசர நிவாரணப் பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் அரசாங்க நிவாரண உதவிகள் தாமதமாக அனுப்பி வைக்கப்பட்டதை ஒப்புக் கொண்டார். தற்போது நிலைமைகள் சீரடைந்து வருவதாகவும், அவர் கூறினார்.

இந்த அனர்த்தத்தில் ஏற்கனவே வெளிவந்த புள்ளிவிபரங்களை விட கூடுதலானோர் இறந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது. கற்றினா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட அமெரிக்கக் கரையோரங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளுக்கு அமெரிக்க மக்கள் சபை 1050 கோடி டொலருக்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

சனாதிபதி புஷ் மிசிசிப்பியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு விஜயம் செய்து மக்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.



அமெரிக்காவை தாக்கிய சூறாவளியால் பாதிக்கப்பட்டு வீடுகளை விட்டு வெளியேறிய நியூ ஓர்லியன்ஸ் மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு செல்ல மீட்பு வாகனத்துக்காக அங்குள்ள நெடுஞ்சாலையில் காத்துக் கிடக்கிறார்கள்.



நியூ ஓர்லியன்ஸ்நகர் பகுதியில் பொலிசார் சோதனை நடத்துவதற்காக காரினை நிறுத்துகின்றனர்.

# அமெரிக்காவில் எரிபொருள் தட்டுப்பாடு சர்வதேச எரிபொருள் அதிகார சபை உதவி

(லண்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள எண்ணெய் நெருக்கடிக்கு உதவும் முகமாக ஐரோப்பாவும் கனடாவும் நாளாந்தம் பத்து இலட்சம் பீப்பாய் எரிபொருளை வழங்க முன் வந்தமையையடுத்து லண்டனில் எண்ணெய் விலை பீப்பா ஒன்றிற்கு இரண்டு டொலர்களால் குறைந்துள்ளது.

சூறாவளி தாக்கத்தையடுத்து அமெரிக்க எண்ணெய் நிலையங்களில் கையிருப்பு பெருமளவு குறைந்துள்ளது. நெருக்கடி நிலைமைகள் மோசமடைந்ததையடுத்து சர்வதேச எரிபொருள் அதிகாரசபை எடுத்த முயற்சி காரணமாக நிலைமையை சமாளிப்பதற்கு ஒரு மாதத்திற்கு நாளாந்தம் இருபது இலட்சம் பீப்பாய் எண்ணெயினை வழங்க எண்ணெய் உற்பத்தி நாடுகள் முன் வந்துள்ளன. சனாதிபதி புஷ் நாட்டு மக்களுக்கு விடுத்த வேண்டு கோளில் எரிபொருளை சிக்கனமாக பாவிக்கும் படிவேண்டியுள்ளார்.

# பாக்.சுப்ரீம் கோர்ட் தற்காலிக நீதிபதியாக முதன் முதலில் இந்து ஒருவர் நியமனம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் தற்காலிக தலைமை நீதிபதியாக முதல் முறையாக ஒரு இந்து மதத்தவர் பதவி யேற்றுள்ளார்.

பாகிஸ்தானில் இந்துக்கள் யாரும் இதுவரை சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதியாக பொறுப்பு வகித்ததில்லை. தற்போது பாக், சுப்ரீம் கோர்ட் மூத்த நீதிபதி ராணா பகவன்தாஸ் அந்த பதவியைப் பெற்றுள்ளார். 63 வயதாகும் இவர் கராச்சியில் பிறந்தவர் பாக்,கில் பணியில் உள்ள சில இந்து நீதிபதிகளில் இவரும் ஒருவர். 1967 இல் பணியில் சேர்ந்த இவர் செஷன்ஸ் நீதிபதி சிந்து மாகாண ஐகோர்ட் நீதிபதி பதவிகளை வகித்தவர். இஸ்லாம் பற்றி முதுகலை பட்டம் பெற்றவர்.

இப்போது தலைமை நீதிபதியாக இருக்கும் இப்திகார் முகம்மது சவுத்ரி பத்து நாள் பயணமாக சீனாவுக்கு சென்றுள்ளார். அவர் திரும்பி வரும் வரை பகவன்தாஸ்அந்த பதவியை வகிப்பார். அரசியலமைப்பு சட்டத்தில் நிபுணர் என கூறப்படும் பகவன் தாஸ் நேற்று முன்தினம் கராச்சியில் பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு நீதிபதி சையது சயீது அஷத் பதவி பிரமாணம் செய்து வைத்தார். சிந்து மாகாண மேல் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# லண்டன் குண்டு வெடிப்பு சந்தேக நபரான சித்திக்கானின் உரையை அல்-ஜசீரா ஒளிபரப்பியது

(லண்டன்)

இங்கிலாந்து நாட்டு தலைநகரமான லண்டனில் கடந்த யூலை 21 ஆம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்பில் முக்கிய குற்றவாளியாக கருதப்பட்ட முகமது சித்திக்கானின் பேச்சு அடங்கிய வீடியோ படத்தை அல் ஜசீரா தொலைக்காட்சி ஒளி பரப்பியுள்ளது.

லண்டன் பேருந்து குண்டு வெடிப்பு, ஸ்பெயின் நாட்டில் நடந்த புகையிரதக் குண்டு வெடிப்பு, நியூ யோர்க் இரட்டைக் கோபுரத் தாக்குதல் போன்றவற்றில் அப்பாவி மக்கள் பலியானார்கள். ஆனால் அப்பாவிகள் மீது நடந்த தாக்குதல்கள் நியாயமான தாக்குதல்கள் தான்.

இங்கிலாந்து, அமெரிக்க போன்ற நாடுகள் எங்கள் நாட்டில் குண்டு வீசுவது, எங்கள் மக்களை சிறையில் அடைப்பது, சித்திரவதை செய்வது போன்ற செயல்களை நிறுத்த வேண்டும் அவற்றை நிறுத்தாத வரை நாங்களும் தாக்குதல்களை நிறுத்த மாட்டோம்.

ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் அரசுகள் எங்கள் நாட்டு மக்கள் மீது தொடர்ந்து அடக்குமுறை செய்து வருகின்றன. அதை நீங்கள் நிறுத்தியாக வேண்டும். அடக்கு முறை செய்யும் அரசுக்கு மக்களாகிய நீங்கள் தான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறீர்கள். ஆகவே நீங்கள் தான் நேரடி பொறுப்பாளிகள் ஆகவே உங்களைப் போன்றவர்கள் மீது (மக்கள் மீது) நாங்கள் தாக்குதல் நடத்துவது சரி தான், நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணரும் வரை உங்கள் மீது தொடர் தாக்குதல் நடத்துவோம் நீங்கள் தான் எங்கள் இலக்கு.

இவ்வாறு சித்திக்கான் அவரது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

அல்-ஹைதா தலைவர்களான பின்லேடன், அய்மான், அல்ஜிவாஹிரி,ஈராக் தலைவர் அபூமுசாப் அல் சர்காவி ஆகியோரை அவர் புகழ்ந்துள்ளார்.

இந்த வீடியோப் படம் எங்கே எடுக கப்பட்டது என்பது தெரியவில்லை சித்திக்கான் அந்தப் படத்தில் ஆயுதம் எதுவும் இல்லாமல் காணப்படுவதால் அது இங்கிலாந்தில் எடுக்கப்பட்ட படமாகவோ அல்லது சித்திக்கான் பாகிஸ்தான் சென்றிருந்த போது எடுக்கப்பட்ட படமாகவோ இருக்கலாமென இங்கிலாந்துப் பொலிசார் கருதுகின்றார்கள்.

அந்த வீடியோ படத்தில் அல் ஹைதாவின் முக்கிய தளபதியான அல் சாவா கிரியின் பேச்சும் இடம் பெற்றுள்ளது.

வீடியோ படத்தில் அல்ஹைதாவின் சின்னமான மேகங்கள் (அல்சாஹப்) இடம் பெற்றிருப் பதால் இது உண்மையில் அல் ஹைதா இயக்கம் தயாரித்த வீடியோ படம் தான் என்று இங்கிலாந்து பொலிசார் கருதுகின்றார்கள்.

# சுமாத்திரா தீவில் மீண்டும் நிலநடுக்கம்

சுனாமியை தொடர்ந்து இந்தோனேஷியாவின் சும த்திரா தீவில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்திய நேரப்படி பிற்பகல் 1.34 மணிக்கு சுமாத்திராவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவில் இது 5.2 என பதிவாகியிருந்தது. வடக்கு சுமாத்திரா பகுதியில் இந்த நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது. சேத விவரம் குறித்து உடனடியாக தகவல் இல்லை.

## சூறாவளியால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவுக்கு இந்.நிதி உதவி

அமெரிக்காவின் நியுஓர்லியன்ஸ் பகுதியில் கற்றினா சூறாவளி தாக்கியதினால் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு உதவ இந்தியா ஐந்து மில்லியன் டொலர் நிதியுதவியினை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது. இந் நிதி நியு ஓர்லியன்ஸிலுள்ள அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் பிரதமர் அலுவலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இதே சிறிலங்காவும்,

# மட்டு-ஆக்கிரமிப்பு பகுதிக்குள் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

## -படையினரின் கெடுபிடிகளே காரணம்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் மக்களின் இயல்புவாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுவருகிறது. படையினரின் கெடுபிடிகள் அதிகரித்துச்செல்வதே இந்நிலைமைக்கு காரணமாக அமைந்துள்ளது.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை, சந்திவெளி, காயங்கேணி, ஏறாவூர் மற்றும் கோரக்கல்லிமடு போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் கைகுண்டு வீச்சு சம்பவங்களினை அடுத்து இப்பகுதிகளில் பெருந்தொகையான இராணுவத்தினரும் பொலிசாரும் வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவத்தினை அடுத்து பொதுமக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது. தற்போது அவசர காலசட்டம் அமுலில் உள்ளமையினால் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி கைது செய்யப்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

தூர இடங்களுக்குசென்று தமது பணியினை நிறைவு செய்து கொள்ள இயலாத நிலைமை தோன்றியுள்ளது. தமது அன்றாட தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாத அளவிற்கு நிலைமை மாறியுள்ளதாகவும், எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாதநிலையில் பீதியடைந்துள்ளதாகவும்; இரவு வேளையில் இராணுவ உடையில் ஆயுத முனையில் வீடுகள், கடைகள் என்பனவற்றில் பணம், தங்கநகைகள் கொள்ளையடிக்கும் கும்பல்கள் நடமாடுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சாரண ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

முல்லை மாவட்ட சாரண ஆசிரியர்களுக்கான சிறப்புக் கலந்துரையாடல் எதிர்வரும் ஏழாம் திகதி காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட கல்விக் கழக செயலகத்தில் (புதுக்குடியிருப்பு) நடைபெறவுள்ளதென மாவட்ட கல்விக்கழக பொறுப்பாளர் தெரிவித்தார். வவுனியாவில் நடைபெற்ற எழுச்சி மாநாட்டிற்கு வலுச்சேர்க்கும் வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ள எழுச்சிப்பிரகடனம் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடலே இவ்வாறு நடைபெறவுள்ளதென தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் திரிசாரண அமைப்பினரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தெரிவித்ததோடு துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள சாரண பொறுப்பாசிரியர்கள் நடைபெறவுள்ள கலந்துரையாடல்களுக்கு வருகைதரும்போது சாரண மாணவர்களின் விபரத்தினையும் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (20)

# ஒட்டுக்கு வைத்த தீ நெற் சூடுகளை அழித்தது

வட்டக்கச்சி கல்மடுநகர் பகுதியில் ஏழு ஏக்கர் நெற்சூடு முற்றாக தீயினால் எரிந்து நாசமானது. இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:- திருமதி இராஜகுலசிங்கம் இரத்தினேஸ்வரி என்பவரின் ஏழு ஏக்கர் நெல் வயல் அறுவடை செய்யப்பட்டு மூன்று சூடுகளாக வைக்கப்பட்டிருந்தது அயலில் அறுவடைசெய்யப்பட்ட வயலொன்றில் ஒட்டுத்தாள்களுக்கு வைக்கப்பட தீ மேற்படி நெற் சூடுகளில் பற்றிக்கொண்டதில் அனைத்தும் அழிந்து நாசமானது. மேற்படி சம்பவம் கடந்த 23ஆம் திகதி இடம் பெற்றது. இதனால் குறித்த விவசாயி பலத்த இழப்பையும் நெருக்கடியையும் எதிர்நோக்கியுள்ளார்.

# பால்நிலை சமத்துவம் குறித்து விழிப்புணர்வூட்டும் செயலமர்வு

(முல்லை)

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் பால் நிலை சமத்துவம் தொடர்பான விழிப்புணர்வூட்டும் செயலமர்வு நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு வண்ணாங்குளம் "ஏ" தற்காலிக குடியிருப்பில் ஆரம்பமானது.

பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்திட்ட இணைப்பாளர் பாமினி தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பால் நிலை சமத்துவம் தொடர்பான கருத்தினை பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுத்திட்ட இணைப்பாளர் சுகந்தா வழங்கினார். இந்த நிகழ்வில் ஆண்,பெண் பேதமின்றி பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கியதோடு இந்தப் பயிற்சிதமக்குபயனுள்ளதாக அமைந்ததுஎன்றும்தெரிவித்தனர். (20)

# முல்லை தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு பிரதேச ரீதியாக தயார்ப்படுத்தல்கள் ஆரம்பம்

(ஒட்டுசுட்டான்)

வவுனியாவில் நடைபெற்ற தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் எதிர்வரும் 14 ஆம் திகதி முல்லை மாவட்டத்தில் நடைபெறவுள்ள எழுச்சிப் பிரகடனத்திற்கான தயார்ப்படுத்தும் செயற்பாடுகள் பிரதேச ரீதியாக ஒட்டுசுட்டான் பிரதேசத்திலும் நடைபெற்று வருகிறது.

நியாப்திட்ட வளாகத்தில் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி. சுபாஜினி கந்தையா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லை மாவட்ட நியாப்திட்டப் பிரதிப்பணிப்பாளர் கோ.சிவநாதன், முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் முரளி, முல்லை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சிறப்புக்கருத்துரைகள் வழங்கினர். இதில் துறை சார்ந்த அனைத்து பிரதிநிதிகள, பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அதேவேளை முல்லை எழுச்சி பிரகடன நிகழ்விற்கான வாராந்த திட்டமிடற் கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை மாலை ஐந்து மணிகக மாவட்ட செயற்குழுவின் துணைத் தலைவர் ப.அரியரத்தினம் தலைமையில் மாவட்ட செயற்குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக் கூட்டத்திற்கு முல்லை மாவட்ட பிரதேச செயலாளர்கள், வலய பிரதி உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனத்தலைவர்கள், மற்றும் பத்திரிகையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் வவுனியா பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் பலதீர்மானங்களும் திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. (05)

# மகா கும்பாபிஷேகம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலை அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக திருவிழா எதிர்வரும் ஏழாம் திகதியன்று காலை ஆறு மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக நிகழ்வுகள் நாளை ஆரம்பமாகி நடைபெற்று ஆறாம் திகதி காலை ஏழு மணியிலிருந்து பிற்பகல் 5.30 மணிவரை எண்ணெய்க்காப்பு நிகழ்வு இடம்பெற்று ஏழாம் திகதியன்று காலை ஆறு மணிக்கு மகா கும்பாபி ஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம்பெற்று 16ஆம் திகதியன்று சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரால் கிளிநொச்சி நகர் மீது மேற்கொள்ளப்பெற்ற சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தினரின் எறிகணை மற்றும் வான் தாக்குதல் காரணமாக மேற்படி ஆலயம் முற்றாகச் சேதமாக்கப்பட்டு தற்போது கிளி.மாவட்ட வைத்தியசாலை அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் இவ் ஆலயம் புனரமைக்கப்பெற்று மகாகும்பாபிஷேகம் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி.சித்த மருத்துவ மூலிகை உற்பத்தியாளர் திட்டமிடல் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சித்த மருத்துவ மூலிகை உற்



பத்தியாளர் கூட்டுறவுத் திட்டமிடல் பட்டறை ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேசசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் மருத்துவர் கே.திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில், பொதுச் சுடரினை கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் அருள் ஏற்றிவைத்தார்.

ஆசியுரையினைத் தொடர்ந்து திட்டமிடல் கருத்தரங்கினை மருத்துவர் ஜெயராசா ஆரம்பித்துவைத்தார்.

மேற்படி நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபை செயலர் குலேந்திரன், விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன்,மருத்துவர் தாமோதரம்பிள்ளை, யூ.என்.டி.பி யை சேர்ந்த தர்மரட்ணம், கிளிநகர கிராமசேவகர் இராஜேஸ்வரன், தமிழீழ நிர்வாகசேவை நிர்வாக உத்தியோகத்தர் கிருஸ்ணபிள்ளை, தமிழீழ சுகாதாரசேவைகள் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் காந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். (கு.தீ)

# நடமாடும் சேவை ஊடாக காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச காணி அலுவலகத்தின் நடமாடும் சேவைகள் மூலம் காணி பகுதி நாள் விசாரணைகள் மேற்கொள்ளப்பெற்று காணி அனுமதிப்பத்திர மற்றவர்களுக்கு காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் ஆறாம் திகதியன்று புதுமுறிப்பு, சோலைநகர் கிராமங்களுக்கான காணி சம்பந்தமான நடவடிக்கைகள் புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்திலும், எதிர்வரும் எட்டாம் திகதியன்று கிருஸ்ணபுரம், விநாயகபுரம் கிராம மக்களுக்கான காணி சம்பந்தமான நடவடிக்கைகள் கிருஸ்ணபுரம் கிராமஅபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து நடைபெறவுள்ளதெனவும் மேற்படி தினங்கள் அந்தந்த பகுதிகளிலுள்ள காணி சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளவர்கள் தேசிய அடையாள அட்டை, மற்றும் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் வேண்டியுள்ளார். (சோ)

# "அனுபவமும் அறிமுகமும்" நூல்வெளியீட்டு விழா

வி.எஸ்.சிவகரன் எழுதிய "அனுபவமும் அறிமுகமும்" எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் பத்தாம்திகதி மன்னார் இலுப்பைக் கடவை பாடசாலை மண்டபத்தில் காலை 10.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, மன்னார் அரச அதிபர் வி.விஸ்வலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# கிளிநொச்சி விவசாய பீட மீளமைப்பு கட்டுமானத்திற்கான அடிக்கல் நாட்டல்

## -நிகொட் திட்டத்தின்கீழ் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் கருத்திட்டத்தில் யாழ். பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி விவசாய பீட மீளமைப்பு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.175 மில்லியன் ரூபா செலவில் மீளமைக்கப்படவுள்ள விவசாயபீடமீளமைப்புக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு ஆறாம்திகதி காலை9.00 மணிக்கு கிளிநொச்சி விவசாயபீட வளாகத்தில் நடை பெறவுள்ளது.

அதேபோன்றுகிளிநொச்சி மத்திய கல்லூரி மீளமைப்புக்கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும்,ஆறாம்திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் நிகொட் கருத்திட்டத்தின் கீழ் 94 மில்லியன் ரூபா செலவில் கிளி.மத்திய கல்லூரியின் புனரமைப்பு கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (சோ)

# திருமுறை பண்ணிசை விளக்கம் நூல் வெளியீடு

செல்வி மணிமேகலாதேவி கார்த்திகேசு எழுதிய "திருமுறைபண்ணிசை விளக்கம்" என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு இன்று மாலை திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெற வுள்ளது. கௌரவவிருந்தினராக திருமலை வலயக்கல்விப்பணிப்பாளர் த.திலகரத்தினம் பங்குபற்றினார். தலைமையுரை திருமதி இ.தெட்சணாமூர்த்தி (மட்டக்களப்பு விபுலானந்த இசைநடனக்கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர்), நூல் வெளியீடு-சட்டத்தரணி காசிநாதர் சிவபாலன், நூல் அறிமுகவுரை திருமதி தேவிகாராணி முருகுப் பிள்ளை(ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப் பணிப்பாளர்), வரவேற்புரை-சு.ஞானசக்தி (ஓய்வுபெற்றவனவள அதிகாரி), பதிலுரை-நூலாசிரியை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

# இந்தியாவிலிருந்து நாடுதிரும்பியோர் மூலம் யாழ்.குடாநாட்டில் காசநோய்த் தொற்று

## -காசநோய் வைத்தியநிபுணர் ஜமுனானந்தன்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு மீளக்குடியமரத் திரும்பியுள்ளோரின் மூலமாக இங்கு ஏராளமானோருக்கு காசநோய்த் தொற்று ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட காசநோய் வைத்தியநிபுணர் வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தன் கூறியுள்ளார்.

யாழ்.குடா நாட்டில் கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்ட காசநோய்த் தொற்றுகள் பற்றிய ஆய்வு நடவடிக்கைகளின் மூலமே இது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து சென்று இந்தியாவில் வாழ்ந்து வந்தோரில் 60 வீதமானோர் காச நோய்த் தொற்றுகளுக்கு இலக்காகியுள்ளனர்.

இவ்வாறு தொற்றுக்கு இலக்காகியவர்கள் மீளக்குடியமர்ந்துள்ள இடங்களில் இவர்கள் மூலமாக காசநோய்த் தொற்று இடம் பெற்றுள்ளது கண்டறியப்பட்டுள்ளதாகவும் வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தன் மேலும் கூறியுள்ளார். (33)

# புனிதநகர்ப் பகுதியில் 100 வீடுகள் அமைக்கத்திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் புனிதநகர்ப் பகுதியில் நூறு வீடுகளை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார் தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் கே. பி.எம்.ஜி கிராமம் நூறு வீட்டுத்திட்டத்தின் கீழ் இப்பகுதியில் முதல்கட்டமாக 500 சதுர அடிகளைக்கொண்ட வீடுகளை அடுத்த ஆண்டு இறுதிக்குள் அமைத்துக் கொடுக்க நடவடிக்கையினை எடுத்திருப்பதாக இந்த நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதற்கான வேலைகளை விரைவில் தொடங்க இருப்பதாகவும் பாதிப்படைந்துள்ள இக்கிராமம் அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரிக்கிராமமாக உருவாக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.(28)

# மருதங்குளம், எழுதுமட்டுவாள் பகுதியில் படையினர் இரவு, பகல் தேடுதல்

(தென்மராட்சி)

மருதங்குளம் எழுதுமட்டுவாள், கண்டல்காடு, கழிக்கரை பகுதிகளில் படையினர் நேற்று முன்தினம் இரவு பகலாய் கடும் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். சந்தேகத்திற்கு இடமானோர் இப்பகுதியில் நடமாடுவதாக கூறி இப்பகுதி எங்கும் உள்ள பற்றைகள், காடுகளில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். முற்று முழுதாய் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலேயே இத்தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. (28)

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாவில் 75 பவுண் நகைகள் திருட்டு!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவில் சமார் 75 பவுண் தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்று முன்தினம்காலை வெகுசிறப்பாக நடைபெற்றது. இதில் தமிழர் தாயகத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகை தந்த இலட்சக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

காலை ஏழு மணிக்கு ஆரம்பமான இத்தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட அடியார்கள் ஆலய வீதியெங்கும் சனசமுத்திரமாகக் காட்சி தந்தனர்.

இதனிடையே சனநெரிசல்கள் அதிகமான ஆலயச்சூழலில் இடம்பெற்ற நகை அபகரிப்புச் சம்பவங்களின் போது சுமார் 75 பவுண் நகைகள் திருட்டுப்போயுள்ளது என்று தொண்டர் படைப் பிரிவினர் கூறினர். (33)

# போரில் சேதமடைந்த வீடுகளுக்கான நட்டஈடு இதுவரை கிடைக்கவில்லை

## -தென்மராட்சி மக்கள் முறைப்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்கவென அரசினால் ஒதுக்கப்பட்ட நிதி சாதாரண மக்களுக்கு கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 2000 ஆம் ஆண்டு ஏற்பட்டகடும் போரினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்கவென புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி சாதாரண பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு கிடைக்கவில்லை என்றும் பல அரச உத்தியோகத்தர்களே இந்த நிதியினை இலட்சக்கணக்கில் பெற்று தங்களுடைய வீடுகளைப் புனரமைத்திருப்பதாகவும் பொதுமக்களால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கான நட்ட ஈட்டு விண்ணப்பக் கோவையில் கட்டப்பட்ட நிலையிலேயே பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டதுடன் இந்த விண்ணப்பப்படிவங்கள் குறித்து இதுவரை எந்தவொரு பதிலையும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவிக்கவில்லையென்றும், ஆனால் அரச உத்தியோகத்தர்கள் பலர் இந்த நிதியினைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் பொதுமக்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (28)

# மண் அகழ்வால் 1000 ஏக்கர் நெல்வயல் பாதிப்பு தென்மராட்சி விவசாய சம்மேளனம் குற்றச்சாட்டு

(தென்மராட்சி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் தொடர்ந்து நடைபெற்றுவரும் சட்டவிரோத மண் அகழ்வால் 1000இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்கள் முற்றாய் பாதிக்கப்பட்டிருப்பதாக தென்மராட்சி விவசாய சம்மேளனம் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளது.

கெற்பெலி, பாலாவி, கச்சாய், வடக்குமிருசுவில், குடமியன், மந்துவில், வரணி, மட்டுவில், கோயிலாக்கண்டி, தனங்கிழப்பு, கைதடி,நாவற்குழி பகுதிகளிலுள்ள வயல்நிலங்களே தொடர்ந்தும் மண் அகழ்வதற்கான பிரதான இடங்களாக விளங்கி வருவதுடன் இதனால் ஆயிரம் ஏக்கருக்கு மேல் வயல் நிலங்கள் முற்று முழுதாய் நெற்செய்கை செய்ய முடியாத பள்ளங்களாக மாறியுள்ளதாகவும் விவசாய சம்மேளனம் தனது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளது. (28)

# 20 மில். ரூபா செலவில் வழுக்கையாறு புனரமைப்பு

(வலி.மேற்கு)

யாழ்.வழுக்கையாறு புனரமைப்புத்திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. வலி.வடக்கு, வலி.தெற்கு, வலி.தென்மேற்கு,வலி.மேற்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை ஊடறுத்துச் செல்லும் இவ் வழுக்கை யாறு சுமார் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நியாப் திட்டம்-11இல் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. சுமார் நான்கு கட்டங்களாக இவ் அபிவிருத்திப் பணிகள் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (37)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடல் சிவன் பண்ணை வீதியில் உள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

இதில் யாழ்மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டு உள்ளூரில் அமுல் படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் 2005 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வார நிகழ்வுகளுக்கான நடைமுறை ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடி அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளன. (33)

# சாவகச்சேரி மருத்துவமனைக்கு தொலைபேசி வசதிகள்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தின் பிரதான மருத்துவமனையாக விளங்கிவரும் சாவகச்சேரி நகரமருத்துவமனைக்கு சாவகச்சேரி நகர அபிவிருத்திக்குழு மற்றும் மருத்துவமனை அபிவிருத்திக்குழுவின் நீண்டகால கோரிக்கைக்கு அமைவாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் அவர்களினால் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அவசரகால தேவைகளுக்கு பொதுமக்கள் மருத்துவமனையுடன் தொடர்பு கொள்ளவும் அவசர தேவைகளுக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவும்முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

# யாழ்.இல் ஈ.பி.டி.பி தேச விரோதிகளுக்கு உயர் இராணுவப் பாதுகாப்பு

(தென்மராட்சி)

யாழ்.குடா நாட்டில் இயங்கி வருகின்ற ஈ.பி.டி.பி தேச விரோதிகளின் அலுவலகங்களுக்கு உயர் மட்ட இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதுடன், அதிகளவான இராணுவத்தினரும் பணியில் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.

ஒரு சிலருடன் இயங்கி வருகிற இந்த அலுவலகங்களை பாதுகாக்க பெருந் தொகையான படையினரும் பொலிசாரும் தீவிரம் காட்டி வருவதுடன், ஈ.பி.டி.பி தேசவிரோதிகளின் அலுவலகங்களில் முற்று முழுதாய் படையினரே நிலை கொண்டு இருப்பதாகவும் பெயர் அளவிலேயே இவ் அலுவலகங்கள் இயங்கிவருவதாகவும் இவை அனைத்தும் அரசபடை முகாம்கள் என்ற அடிப்படையிலேயே பேணப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது. (28)

# எட்டு கூ. சங்கங்கள் இவ்வாண்டு வெல்ல உற்பத்தியில் ஈடுபடவில்லை

## - சந்தை வாய்ப்பின்மையே காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இந்த வருடம் பனம் வெல்ல உற்பத்தி பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் கூறியுள்ளது.

பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதன் காரணமாகவும், யாழ். குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம் வெல்லத்தை சந்தைப்படுத்தி இலாபம் ஈட்டுவதற்கு ஏற்ற சந்தை வாய்ப்புக்கள் இல்லாமை காரணமாகவும், பனம் வெல்ல உற்பத்தியாளர்கள் பலர் தமது வெல்ல உற்பத்தி நடவடிக்கைகளை இந்த வருடம் கைவிட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே இப்பனை வெல்ல உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

முன்னர் யாழ். குடாநாட்டில் பத்திற்கும் மேற்பட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் வெல்ல உற்பத்தியில் ஈடுபட்ட போதும், இந்த ஆண்டில் அச்சுவேலி மற்றும் கொடிகாமம் ஆகிய பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(33)

## முன்பள்ளி அமைக்க நடவடிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரி முன்பள்ளி ஒன்றை சாவகச்சேரி நகரத்தில் அமைக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதன் அமைப்பாளர் தெரிவித்துள்ளார். கட்டட அமைப்புக்களுடன் பூங்கா, விளையாட்டுதிடல், ஆசிரியர் பயிற்சி நிலையம் என்பன அடங்கியதாக இத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தனியார் தொண்டு நிறுவனம் ஒன்றின் ஊடாகவே இத்திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

## தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்த்தல்

(அலுவலக செய்தியாளர்)

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விளம்பரம் அனைத்து வைத்திய நிலையங்களிலும், சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும், கிளிநொச்சியிலும் பார்வைக்குள்ளது. எனவே இதனைப்பார்வையிட்டு தகுதியானவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். (தீ)

# ஜே.வி.பி யை நோக்கித் தள்ளப்பட்டுள்ள சு.க. வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ

சிறிலங்காவின் பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளருமான மகிந்தராஜபக்ஷ தனது தேர்தல் வெற்றிக்கு ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வது முக்கியமானது எனத் தீமானித்து விட்டார் போலுள்ளது. அவர் முழுமுயற்சியாக ஜே.வி.பியின் ஆதரவைப் பெறுவது தொடர்பானபேச்சுவார்த் தைகளில் ஈடுபட்டு வந்தமை அதனையே காட்டுகின்றது.

சனாதிபதி வேட்பாளராகும் முன்பே அவர் ஜே.வி.பி தலைவர்களுடன் இரகசியப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுவந்ததாகத் தகவல்கள் வெளிவந்தன. சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட பின் ஜே.வி.பியின் ஆதரவைக்கோரி அதன் செயலாளர் ரில்வின் சில்வாவிற்கு தனிப்பட்டமுறையில் கடிதம் எழுதியதாக ஜே.வி.பி கூறுகின்றது.

அதனைத்தொடர்ந்து பலமுறை இரகசிய மாகவும் வெளிப்படையாகவும் ஜே.வி.பியின ருடன் மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை கடந்த ஞாயிற்றுக்கிழமை கரந்தெனியவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்



விமல் வீரவன்ச-மகிந்த

தளவிலான நிபந்தனைகள் உள்ளன என்றும் அதனைப் பிரதமர் ஏற்றுக்கொண்டால் அவருக்கு ஆதரவு வழங்கப்படும் என்றும் கூறியிருந்தது.

இறுதியாகக் கிடைத்த தகவல்கள் ஜே.வி.பி தனியாக வேட்பாளரை நியமிக்காது என்றும் மகிந்த ராஜபக்ஷவையே ஆதரிக்கும் என்றும் கூறுகின்றன.

ஆனால் இந்தப்பேச்சுவார்த்தை தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எடுத்துக் கூறப்பட்டு, பின்னரே ஒப்பந்தம் கைச்சாத் திடப்படும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி

முக்கியஸ்தர்களுக்கு தனித்துப் போட்டியிட்டு ரணிலை வெற்றிகொள்ளலாம் என்ற நம்பிக்கை இல்லை. இதிலே முக்கியமானவர்கள் மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க போன்றவர்கள் ஆவர்.

அமைச்சர் மங்கள சமரவீர,மகிந்தராஜ பக்ஷவுக்கு எட்டுக்கட்சிகள் (தேசிய ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி, மக்கள் ஐக்கிய முன்னணி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, தேசவி முக்தி ஜனதாக்கட்சி, தேசிய முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை மகாஜனக்கட்சி) ஆதரவு தருவதாக கூறியுள்ளபோதும் ஜே.வி. பியின் ஆதரவுடனேயே ஐக்கியதேசியக் கட்சி யை வெற்றிகொள்ள முடியும் என தீவிரமாக நம்புபவர்.

கடந்த முறையும் ஜே.வி.பியுடனான கூட்டை நோக்கி சனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவை வழிநடத்திச்சென்ற அவர் இம்முறையும் இவ்வாறான கூட்டை உருவாக்கிவிடத் திட சங்கற்பம் பூண்டுள்ளார்.

கடந்த பொதுத்தேர்தலில் ஏற்பட்ட கூட்டானது பாராளுமன்றத்தில் 39 உறுப்

என்பது வெளிப்படையாகவே புலப்படுகின்றது.

ஆனால் ஜே.வி.பி தனது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதை பிரதமர் பகிரங்கப்படுத்த வேண்டுமென கூறிவருகின்ற நிலையில் சிறுபான்மையினரின் வாக்குகளை பெறுவதற்கு மகிந்த ராஜபக்ஷ பெரும் முயற்சி எடுக்க வேண்டியவராக இருக்கின்றார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் மழுப் பலான கருத்துக்களை கூறிவரும் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியுடன் கூட்டுவைத்துக் கொண்டபின் எவ்வாறான கருத்தைக் கூறப் போகிறார் என்பது தெரியவில்லை.

ஐக்கியதேசியக்கட்சியானாலும் சரி சிறிலங்கா சுதந்திரக்கடசியானாலும் சரி பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என வெளிப்படையாக கூறிவருகின்றன. ஆனால் கடந்த ஆறுவருடகாலத்தில் இரு கட்சி களும் மாறிமாறி பாராளுமன்ற ஆட்சியில் இருந்த போதும் அது தொடர்பில் பாரிய முயற்சி எத னையும் மேற்கொள்ளவில்லை.

ஐக்கியதேசியக் கட்சி போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டபோதிலும் அதற்கு மேல் முன்னேறி இனவாதிகளின் கோபத்தை சம்பாதித்துக்கொள்ள அது விரும்பவில்லை. அதன் காரணமாகவே அது ஆறுசுற்றுப் பேச்சு வார்த்தைகளின் போது ஒப்புக் கொண்ட



ரில்வின் சோமவன்ச விமல்வீரவன்ச- அனுரதிசாநாயக்க

இணைந்து செயற்பட வருமாறு ஜே.வி.பிக்கு மகிந்தராஜபக்ஷ பகிரங்க அழைப்புவிடுத்தார். இதனையடுத்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்த ஜே.வி.பி மூன்று பேரை நியமித்தது. ரில்வின்சில்வா, விமல்வீரவன்ச, அனுர திஸாநாயக்க ஆகியோரே அவர்களாவர்.

அதன்பின் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையே பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றில் மகிந்தராஜபக்ஷ தனித்தும் அமைச்சர் மங்களசமரவீரவுடன் இணைந்தும் கலந்து கொண்டிருக்கின்றார்.

எவ்வாறாயினும் இந்தப்பேச்சுவார்த்தைகள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் நடைபெற வில்லை என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதிவேட்பாளர் என்ற ரீதியில் தனிப்பட்ட முறையிலேயே நடந்து வருவதாகவும் ஜே.வி. பியின் பிரச்சாரச்செயலாளர் விமல்வீரவன்ச கூறியிருக்கிறார்.

அத்துடன் முன்னர் ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைத்திட்டம் காலாவதியாகி விட்டதாகவும், ஜே.வி.பியின் பிரச்சாரச்செயலாளர் கூறியிருக் கிறார். இதன்படி சனாதிபதி வேட்பாளராகிய மகிந்தராஜபக்ஷவை ஆதரிப்பதுகுறித்துப் பேச தயாராக இருக்கும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனான கூட்டுக் குறித்து இப்



சு.க- ஜே.வி.பி.யுடனான ஒப்பந்தத்தின் போது

போதைக்கு ஆராயாது என்பது புலனாகிறது.

அதேவேளை மகிந்தராஜபக்ஷவை ஆதரிப் பதற்கு 12நிபந்தனைகளை ஜே.வி.பி முன்வைத் திருக்கிறது. இந்த நிபந்தனைகள் எவை என்பது குறித்து ஜே.வி.பி இன்னும் தெளிவாக வெளியிடவில்லை. ஆனால் ஜே.வி.பியின் அரசியல்குழுவும் மத்திய குழுவும் இணைந்து தேசியத்திட்டம் ஒன்றை தயாரிப்பதாகவும் அத்திட்டத்தில் தேசியப்பிரச்சினை மற்றும் பொருளாதாரத்திட்டங்கள் தொடர்பான குறைந்

வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஜே.வி. பியுடன் உடன்பாட்டுக்கு வந்துள்ள நிலையிலும் சனாதிபதி சந்திரிகாவின் முடிவிலேயே ஜே.வி. பியுடனான கூட்டு உறுதிப்படுத்தப்படும்.

இதேவேளை ஜே.வி.பியுடனான கூட்டுக் குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஒத்த கருத்து நிலவவில்லை எனவும் தெரிய வருகிறது. உண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பியுடனான கூட்டை அறவே விரும்பவில்லை. ஜே.வி.பியுடன் கூட்டுவைத்துக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப் படையிலேயே சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவை சந்திரிகா நியமித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் ஜே.வி.பியுடனான கூட்டுக் குறித்து சு.க.வின் சிரேஷ்ட அமைச்சர்கள் அதிருப்தி கொண்டுள்ளமையும் வெளிப்படை யாகும் ஜே.வி.பியுடனான கூட்டு உடனடியாகப் பயன் எதனையும் வழங்கினாலும் நீண்டகால நோக்கில் அது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அழிவுக்கே வழிவகுக்கும் என முன்னரே பல சிரேஷ்ட உறுப்பினர்கள் எச்சரித்திருந்தனர்.

இதனையே 14 மாதகாலமாக ஜே.வி.பி யுடன் நடத்திய கூட்டாட்சி வெளிப்படுத்தியது என்பதும் அவர்கள் கருத்தாகும். இவ்வாறு கருத்துக்கொண்டுள்ள சில அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் மாற்று நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிய வருகின்றது.

வெற்றியோ தோல்வியே தனித்துப் போட்டியிடுவதே சிறந்தது என்ற கருத்துக் கொண் டுள்ள இவர்கள் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட சிறிலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்தால் கட்சியில் இருந்து வெளியேறி ஐ.தே. க.வை ஆதரிக்கத் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

இவர்களை ஒருங்கிணைப்பதில் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

எவ்வாறாயினும் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பல சிறிலங்கா சுதந்திரக் கட்சி

பினர்களை ஜே.வி.பிக்கு பெற்றுக்கொடுத்தது. இதன்காரணமாக ஜே.வி.பியின் ஆட்சியா சு.க.வின் ஆட்சியா நடைபெறுகின்றது' என்ற சந்தேகம் எழுந்தது ஜே.வி.பியின் வெளியேற்றம் ஆனது சு.க.வின் நிலையை மேலும் சிக் கலுக்கு உள்ளாக்கியது. சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நிறைவேற்று அதிகாரம் ஒன்றே ஆட்சியைத் தக்கவைக்க உதவியது. ஆனால் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவின் பதவிக்காலமானது இறுதிக் கட்டத்தில் இருந்தமையால் ஜே.வி.பியின் அழுத்தம் மிகப் பெரியதாக இருந்தது. இறுதியில் சனாதி



மங்கள சமரவீர மகிந்த

பதியால் தாங்கமுடியாது போக ஜே.வி.பியின் வெளியேற்றத்திற்கு, அது வழிகோலியது.

இப்பொழுது சனாதிபதித் தேர்தலில் எவ்வாறாயினும் வெற்றிபெற்று விட்டால் ஆறு வருடகால பதவிக்காலத்தை கொண்ட மகிந்த ராஜபக்ஷவிடம் ஜே.வி.பியின் ஆட்டம் பலிக்காது, என சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சிலர் கணக்குப்போடுவதாக தெரி விக்கப்படுகிறது.

இனப்பிரச்சினை விவகாரத்தில் மகிந்தராஜ பக்ஷவும் ஜே.வி.பியும் பெருமளவில் ஒரேசிந் தனையை கொண்டவர்களாக இருப்பினும் பொருளாதாரக்கொள்கையும் அவ்வாறோ அமைந்து விடாத நிலையில் தேர்தலில் வெற்றி யை நோக்கமாக கொண்டு கூட்டணி அமைப்பது அவ்வாறான முடிவின் அடிப்படையிலானதாகவும் இருக்கலாம்

எது எப்படியிருப்பினும் ஜே.வி.பியை கூட்டுச் சேர்த்துக்கொள்வது மகிந்தராஜபக்ஷவின் முடிவு

விடயங்களைக் கூட நடைமுறைப்படுத்த வில்லை.

ஆனால் ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த காரணத்தால் அவ்வாறான கண்துடைப்பு முயற்சிகளில் ஈடுபடக்கூட சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குவாய்ப்புக் கிடைக்கவில்லை. அதாவது சிறிய நகர்வைக்கூட சிறிலங்கா சுதந்திரக் கட்சியால்மேற்கொள்ள முடிய வில்லை.

ஐ.தே.கட்சியை பொறுத்து சில பொரு ளாதார அபிவிருத்தித் திட்டங்களை அதனால் மேற்கொள்ள முடிந்தது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியால் சில திணைக்களங்களில் கூட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள முடியவில்லை.

கடந்த ஆட்சிக்காலத்தின் போது அடிமட்ட மக்களின் வாழ்வியலை மேம்படுத்த ஐ.தே.க முயலாமையே 2004 தேர்தலில் அதன் தோல்விக்கு முக்கியமான காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி கூட்டாட்சி யில் மக்களின் நிலைமை மேலும் மோச மடைந்தது' என்றே கூறவேண்டும். அத்துடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் பரிதாப நிலை சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மேலும் தாக்கத் தை விளைவிக்கக் கூடியதாகும்.

அரச ஊழியர் சம்பள உயர்வு, 'பட்டதாரிகள் வேலைவாய்ப்பு, இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பு, விலைவாசிக் குறைப்பு என்பன உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த கூட்டமைப்பு இவற்றில் எதனையுமே நிறைவேற்றாமையும், மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதகமான அம்சங்கள். எனவே முன்னரை விடவும் ஜே.வி.பியை அரவணைக்க வேண்டிய தேவை மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கின்றது. அதன் காரணமாக அத்திசை யிலேயே அவரது முழுக்கவனமும் உள்ளது.

**வேலவன்**

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

யா/சா/8359 திரு.சின்னப்பு கணேசலிங்கம்.
யா/சா/8426 திருமதி.விக்டோறியா இமானுவல்.
யா/சா/8484 திரு.திசைவீரசிங்கம் தருமரத்தினம்.
யா/சா/8695 திரு.தர்மலிங்கம் சந்தணராசா.
யா/சா/9076 திரு.முத்து கந்தவனம்.
யா/சா/9120 திருமதி.புனிதநந்தினி ஜெயராசா.
யா/சா/9328 திரு.கந்தசாமி தயாபரன்.
யா/சா/9343 திரு.நாகர் சிவலிங்கம்.
யா/சா/9353 திரு.சுவாம்பிள்ளை இராசரத்தினம்.
யா/சா/9369 திரு.பொன்னையா செல்வரத்தினம்.
யா/சா/9379 திரு.வேலுப்பிள்ளை சின்னப்பு.
யா/சா/9424 திரு.கனகசுந்தரம் கணபதிப்பிள்ளை.
யா/சா/9507 திரு.வேலுப்பிள்ளை துரைராசன்.
யா/சா/9538 திரு.சின்னப்பு செல்லத்துரை.
யா/சா/9651 திரு.வேலுப்பிள்ளை இரத்தினராசா.
யா/சா/9700 திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரராசா.
யா/சா/9733 திருமதி.பத்மலோசினி ரவிச்சந்திரன்.
யா/சா/9793 திரு.அருளாணந்தம் கஜேந்திரன்.
யா/சா/9833 திருமதி.தங்கமணி சின்னத்தம்பி.
யா/சா/9844 திருமதி.யோகம்மா வினாசித்தம்பி.
யா/சா/9857 திரு.விசுவலிங்கம் சிவானந்தன்.
யா/சா/9893 திரு.வேலுப்பிள்ளை மாணிக்கம்.
யா/சா/9963 திரு.மயிலன் நடேசபிள்ளை.
யா/சா/9997 திரு.மாதன் தம்பிஐயா.
யா/சா/10002 திரு.இராசையா பாலசுப்பிரமணியம்.
யா/சா/10034 திரு.மயில்வாகனம் சிறிதரன்.
யா/சா/10073 செல்வி.இரமணிசியாமா நடராசா.
யா/சா/10092 திரு.கந்தன் இளையவன்.
யா/சா/10219 திரு.பரமானந்தர் அம்பாலவாணபிள்ளை.

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/உ/14 திருமதி.இராசம்மா சின்னத்துரை.
யா/உ/21 திரு.கந்தையா மயில்வாகனம்.
யா/உ/36 திரு.செல்லப்பா செல்லத்துரை.
யா/உ/38 திருமதி.சொர்ணம்மா உலகசேகரம்.
யா/உ/39 திருமதி.எலிசபெத்ராணி திருச்செல்வம்.
யா/உ/41 திரு.முத்துச்சாமிகுருக்கள் நவநீதஐயர்.
யா/உ/61 திருமதி.அன்னபூபதி கந்தையா.
யா/உ/63 திரு.சின்னத்தம்பி ஈஸ்வரஆனந்தன்.
யா/உ/71 திரு.வைத்திலிங்கம் கந்தையா.
யா/உ/73 திரு.பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை.
யா/உ/81 திரு.விநாசித்தம்பி மயில்வாகனம் நவரத்தினம்.
யா/உ/96 திரு.சாமுவேல் சிமியோன்.
யா/உ/105 திரு.விசுவநாதக்குருக்கள் இராமச்சந்திரஐயர்.
யா/உ/114 திருமதி.பாஞ்சாலதேவி செல்வராசா.
யா/உ/122 திருமதி.பரமேஸ்வரி திருநாவுக்கரசு.
யா/உ/140 திரு.ஆறுமுகம் கந்தையா.
யா/உ/143 திரு.சின்னத்துரை கந்தசாமி.
யா/உ/146 திரு.சிந்தாமணி மகேசன்.
யா/உ/152 திரு.வேலாயுதம் இராசரத்தினம்.
யா/உ/157 திரு.சோமசுந்தரம் சபாரத்தினம்.
யா/உ/178 திரு.இளையவர் சுப்பிரமணியம்.
யா/உ/182 திரு.கந்தையா ஏகாம்பரம்.
யா/உ/198 திருமதி.பரமேஸ்வரி கனகசபை.
யா/உ/199 திரு.கந்தையா கனகசபை.
யா/உ/201 திரு.கந்தையா காசிநாதர்.
யா/உ/203 திரு.ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன்.
யா/உ/204 திரு.கனகசபை கதிரவேல்.
யா/உ/206 திரு.சுப்பிரமணியம் கந்தசாமி.
யா/உ/209 திரு.மயில்வாகனம் கனகசுந்தரம்.
யா/உ/228 திருமதி.பரமேஸ்வரி சிதம்பரநாதன்.
யா/உ/234 திரு.கந்தையா இரத்தினம்.
யா/உ/235 திரு.கந்தையா இராசா.
யா/உ/240 திரு.காசியர் இராசையா.
யா/உ/248 திரு.சின்னத்தம்பி செல்வரட்ணம்.
யா/உ/250 திரு.நாகமுத்து செல்லத்துரை.
யா/உ/254 திரு.சண்முகரத்தினஐயர் சோமாஸ்கந்தசர்மா.
யா/உ/270 திருமதி.செல்வலட்சுமி மண்டலநாயகம்.
யா/உ/277 திரு.மாணிக்கத் தியாகராசா தேவராசா.
யா/உ/282 திரு.சின்னவி தம்பிமுத்து.
யா/உ/287 திரு.மயில்வாகனம் வாமதேவா.
யா/உ/291 திரு.கணபதி முருகுப்பிள்ளை.
யா/உ/292 திரு.கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/உ/293 திரு.முருகேசு மகேசன்.
யா/உ/309 திரு.நாகலிங்கம் குமாரகுருநாதன்.
யா/உ/316 திருமதி.சிவபாக்கியம் மயில்வாகனம்.
யா/உ/323 திருமதி.இரத்தினம் மயில்வாகனம்.
யா/உ/339 திருமதி.சிவபாக்கியம் நடராசா.
யா/உ/344 திருமதி.சரஸ்வதி பத்மநாதன்.
யா/உ/347 திரு.சுப்பையா சின்னத்துரை.
யா/உ/358 திரு.கந்தர் ஐயாத்துரை.
யா/உ/359 திருமதி.கிறேஸ் ஜெபமணிபோல்.
யா/உ/364 திரு.சபாபதி கந்தசாமி.
யா/உ/383 திரு.சீனியட்டியா நாகலிங்கம்.
யா/உ/390 திரு.சாமுவேல் பீற்றர்.
யா/உ/395 திரு.தில்லையம்பலம் பஞ்சாட்சரம்.
யா/உ/399 திரு.ராமலிங்கம் ரட்ணசிங்கம்.
யா/உ/400 திருமதி.இராசமணி சண்முகநாதன்.
யா/உ/403 திரு.அரியகுட்டி இராசரத்தினம்.
யா/உ/422 திரு.கந்தையா சிவசுப்பிரமணியம்.
யா/உ/429 திரு.சின்னத்துரை சிவபெருமான்.
யா/உ/442 திருமதி.தெய்வானைப்பிள்ளை கனகசபை.
யா/உ/443 திரு.கணபதி துரைராசா.
யா/உ/451 திரு.பொன்னம்பலம் விஜயரத்தினம்.
யா/உ/466 திரு.ஐயம்பிள்ளை வைத்திலிங்கம்.
யா/உ/474 திரு.கந்தையா நடராசா.
யா/உ/475 திரு.ஆறுமுகம் நடராசா.
யா/உ/488 திரு.ஆறுமுகம் நடேசன்.
யா/உ/489 திருமதி.அதேலம்மா சூசைப்பிள்ளை.
யா/உ/491 திருமதி.கமலா சுகுணராஜா.
யா/உ/496 திரு.கார்த்திகேசு சயலொனிபவன்.
யா/உ/497 திரு.வல்லிபுரம் செல்லத்துரை.
யா/உ/498 திரு.கந்தப்பு செல்லத்துரை.
யா/உ/508 திரு.மேன் சாமுவேல் அரியநாயகம்.
யா/உ/519 திரு.சபாபதி பசுபதி.
யா/உ/529 திரு.வைத்திலிங்கம் துரையப்பா.
யா/உ/539 திரு.வீ.தம்பிராசா திருநாவுக்கரசு (நாவேந்தன்).
யா/உ/540 செல்வி.வசந்தினி இரத்தினதயா.
யா/உ/549 திரு.சுப்பிரமணியம் குமாரசாமி.
யா/உ/551 திரு.தம்பிப்பிள்ளை கந்தசாமி.
யா/உ/578 திரு.இளையதம்பி செல்வரட்ணம்.
யா/உ/582 திரு.வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/உ/587 திரு.சின்னத்தம்பி சிவராஜசிங்கம்.
யா/உ/599 திரு.கந்தையா அம்பலவாணர்.
யா/உ/611 திரு.பொன்னம்பலம் இளையதம்பி.
யா/உ/614 திருமதி.ஞானமணி வல்லிபுரம்.
யா/உ/615 திரு.அம்பலம் ஞானதுரை.
யா/உ/617 திரு.சுப்பையா ஐயாத்துரை.
யா/உ/632 திரு.இரத்தினம் கணேசன்.
யா/உ/633 திரு.காத்தி கிருஷ்ணன்.
யா/உ/635 திரு.வேலுப்பிள்ளை கிருஷ்ணசாமி.
யா/உ/655 திரு.வினாசித்தம்பி கணேசதாஸ்.
யா/உ/662 திரு.கதிர்காமு கோபாலபிள்ளை
யா/உ/669 திரு.கதிர்காமு கந்தையா.
யா/உ/670 திருமதி.கனகம்மா கந்தையா
யா/உ/673 திரு.அம்பலம் முருகேசம்பிள்ளை.
யா/உ/675 திரு.முருகேசு முதலித்தம்பி.
யா/உ/678 திரு.கார்த்திகேசு மயில்வாகனம்.
யா/உ/683 திருமதி.மகேஸ்வரி இராமுப்பிள்ளை.
யா/உ/687 திரு.கந்தையா நடராசா.
யா/உ/688 திரு.சின்னத்துரை நடராசா.
யா/உ/694 திரு.சுப்பையா நல்லையா.
யா/உ/706 திரு.சிவகுரு பஞ்சாட்சரம்.
யா/உ/718 திரு.மாணிக்கம் இராசரத்தினம்.
யா/உ/722 திரு.நன்னித்தம்பி இராமநாதன்.
யா/உ/729 திருமதி.கனகேஸ்வரி பசுபதிப்பிள்ளை.
யா/உ/732 திரு.கனகசபை இராசரத்தினம்.
யா/உ/733 திரு.கந்தையா இராசரத்தினம்.
யா/உ/739 திரு.வேலாயுதம் சுப்பிரமணியம்.
யா/உ/744 திரு.தம்பியப்பா சிவசுப்பிரமணியம்.
யா/உ/768 திரு.அப்பாத்துரை சண்முகநாதன்.
யா/உ/773 திரு.முத்தையா சபாரத்தினம்.
யா/உ/779 திரு.தம்பிமுத்து செல்லத்துரை.
யா/உ/798 திரு.வல்லிபுரம் திருநாவுக்கரசு.
யா/உ/803 திரு.சுந்தரம் திருச்செல்வம்.
யா/உ/804 திரு.மார்க்கண்டு தங்கராசா.
யா/உ/813 திருமதி.வாலாம்பிகை பஞ்சாட்சரம்.
யா/உ/816 திரு.நடராஜஐயர் வீரமணிஐயர்.
யா/உ/824 திரு.வினாசித்தம்பி வேலுப்பிள்ளை.
யா/உ/826 திரு.கதிரித்தம்பி வேலும்மயிலும்.
யா/உ/830 திரு.கந்தையா விஸ்வலிங்கம்.
யா/உ/837 திருமதி.புஸ்பராணி யோகரத்தினம்.
யா/உ/846 திருமதி.ஞானரத்தினம் சிவசம்பு.
யா/உ/852 திரு.செல்லையா அமிர்தலிங்கம்.
யா/உ/857 திரு.கனகர் இளையதம்பி.
யா/உ/872 திரு.வேலாயுதம் கனகரத்தினம்.
யா/உ/875 திரு.வீரசிங்கம் கந்தசாமி.
யா/உ/876 திருமதி.கணேஸ்வரி கெங்காதரம்.
யா/உ/879 திரு.கந்தையா கனகசபை.
யா/உ/880 திரு.கதிரேசு கந்தையா.
யா/உ/894 திருமதி.நாகம்மா சுப்பிரமணியம்.
யா/உ/895 திரு.ஆறுமுகம் நடேசர்.
யா/உ/922 திரு.சுப்பையா இராசரட்ணம்.
யா/உ/925 திரு.சின்னத்தம்பி செல்வானந்தன்.
யா/உ/929 திருமதி.இரத்தினஅம்மா முருகையர்.
யா/உ/934 திரு.சிவசுப்பிரமணிஐயர் சிவசரவணபவன்.
யா/உ/936 திரு.இராசையா செல்லையா.
யா/உ/938 திரு.வல்லிபுரம் சபாபதி.
யா/உ/950 திருமதி.சிவாம்பிகை தியாகராசா.
யா/உ/951 திரு.சிவசம்பு சிவநேசன்.
யா/உ/953 திரு.செல்லையா சண்முகநாதன்.
யா/உ/960 திருமதி.சரஸ்வதி தருமலிங்கம்.
யா/உ/972 திரு.இராசையா சபாரத்தினம்.
யா/உ/977 திரு.சின்னக்குட்டி தம்பிஐயா.
யா/உ/983 திரு.வேலுப்பிள்ளை தியாகராசா.
யா/உ/855 திரு.சிவசம்பு தனபாலசிங்கம்.
யா/உ/990 திரு.அப்பாப்பிள்ளை தேவராசன்.
யா/உ/977 திரு.இராமு வீரசிங்கம்.
யா/உ/1011 திரு.சின்னட்டிப்பிள்ளை தம்பிராசா.
யா/உ/1015 திரு.கந்தையா கந்தவனம்.
யா/உ/1017 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/உ/1032 திரு.இராசையா சச்சிதானந்தன்.
யா/உ/1039 திரு.தம்பையா சிவம்.
யா/உ/1044 திருமதி.சுகிர்தமலர் அமரசிங்கம்.
யா/உ/1049 திரு.வாஞ்சீஸ்வரக்குருக்கள் முத்துக்குமாரசாமிசர்மா.
யா/உ/1069 திரு.வேலாயுதம்பிள்ளை செல்லையா.
யா/உ/1091 திரு.சபாபதிப்பிள்ளை பரராஜசிங்கம்.
யா/உ/1121 திருமதி.சோதிமணி சுப்பிரமணியம்.
யா/உ/1124 திரு.மயில்வாகனம் சத்தியபாலன்.
யா/உ/1132 திரு.சின்னப்பு குணசிங்கம்.
யா/உ/1139 திரு.இராசா கந்தவனம்.
யா/உ/1140 திரு.ஆறுமுகம் கந்தசாமி.
யா/உ/1144 திரு.செல்லத்துரை நாகராசா.
யா/உ/1150 திரு.பேரம்பலம் பரமேஸ்வரநாதன்.
யா/உ/1152 திரு.முருகர் பொன்னர்.
யா/உ/1160 திரு.கந்தையா சண்முகநாதன்.
யா/உ/1163 திரு.காசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை.
யா/உ/1177 திரு.ஸ்ரீபன் அரியரத்தினம்.
யா/உ/1178 திரு.இராமு ஆனந்தசுந்தரம்.
யா/உ/1179 திரு.சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை.
யா/உ/1185 திரு.நாகமுத்து கந்தசாமி.
யா/உ/1186 திரு.இம்மானுவேல் யோசெவ்கென்றி.
யா/உ/1196 திருமதி.கனகமலர் சீவரட்ணம்.
யா/உ/1198 திரு.மாணிக்கம் கனகரத்தினம்.
யா/உ/1205 திரு.முத்தையா முத்துச்சுவாமி.
யா/உ/1207 திரு.சவுந்தரையா எட்வேட் நவரெத்தினராஜா.
யா/உ/1220 திரு.சின்னத்தம்பி சிற்றம்பலம்.
யா/உ/1224 திரு.தம்பையா சிவலிங்கம்.
யா/உ/1233 திரு.ஆனந்தசுந்தரம் சண்முகராஜா.
யா/உ/1234 திரு.வீரகத்தி சின்னத்துரை.
யா/உ/1236 திருமதி.தங்கம்மா வெற்றிவேலு.
யா/உ/1237 திருமதி.தவமணி பாலசிங்கம்.
யா/உ/1242 திரு.நாகலிங்கம் விநாயகமூர்த்தி.
யா/உ/1245 திரு.செல்லையா அமரசிங்கம்.
யா/உ/1248 திரு.தம்பு அப்பலிங்கம்.
யா/உ/1252 திரு.தம்பு குலசேகரம்.
யா/உ/1264 திரு.பொன்னம்பலம் பொன்னுத்துரை.
யா/உ/1274 திரு.மாணிக்கம் சிவரத்தினம்.
யா/உ/1277 திரு.சின்னத்தம்பி சிவராசா.
யா/உ/1281 திரு.சிதம்பரப்பிள்ளை சிவகுரு.
யா/உ/1297 திரு.சுந்தரம் ஈஸ்வரதாஷ்.
யா/உ/1314 திரு.பொன்னையா கதிரவேலு.
யா/உ/1318 திருமதி.லட்சுமி ராஜரட்ணம்.
யா/உ/1319 திரு.மாதர் மாணிக்கம்
யா/உ/1320 திரு.லூக்காஸ்பிள்ளை மாசலீன்.
யா/உ/1321 திருமதி.மனோன்மணி சிவஞானம்.
யா/உ/1327 திருமதி.பேரின்பநாயகி கதிரவேலு.
யா/உ/1336 திரு.சீவரத்தினம் செல்வரத்தினம்.
யா/உ/1337 திரு.செல்லையா சங்கரலிங்கம்.
யா/உ/1343 திரு.வயித்திலிங்கம் சுப்பிரமணியம்.
யா/உ/1344 திருமதி.தவமணி சிவபாதசுந்தரம்.
யா/உ/1346 திரு.நாகலிங்கம் செல்வரத்தினம்.
யா/உ/1351 திரு.வயித்திலிங்கம் சிவசுப்பிரமணியம்.
யா/உ/1364 திரு.பேரம்பலம் வாமதேவன்.
யா/உ/1367 திரு.பொன்னையா அப்பாக்குட்டி.
யா/உ/1368 திருமதி.அன்னம்மா பொன்னையா.
யா/உ/1370 திருமதி.அன்னலட்சுமி வரோதயசிங்கம்.
யா/உ/1396 திரு.கந்தையா குணசிங்கம்.
யா/உ/1398 திருமதி.கண்மணி நடராசா.
யா/உ/1403 திரு.முருகேசு கந்தையா.
யா/உ/1411 திரு.பொன்னையா முருகேசு.
யா/உ/1415 திருமதி.பொன்னம்மா மார்க்கண்டு.
யா/உ/1418 திரு.சங்கரப்பிள்ளை நடராசா.
யா/உ/1419 திருமதி.நல்லபிள்ளை முருகேசு
யா/உ/1427 திருமதி.நாகம்மா சந்தியாப்பிள்ளை.
யா/உ/1439 திரு.இளையதம்பி புவனாயகபாகு.
யா/உ/1451 திரு.வல்லிபுரம் இராசையா.
யா/உ/1474 திரு.செல்லப்பா சுப்பிரமணியம்.
யா/உ/1480 திரு.தம்பிமுத்து செல்வரத்தினம்.
யா/உ/1483 திருமதி.செபரத்தினம் செல்வரத்தினம்.
யா/உ/1485 திரு.கந்தையா சிவலிங்கம்.
யா/உ/1493 திரு.மாரிமுத்து செல்லத்துரை.
யா/உ/1494 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/உ/1497 திருமதி.சின்னமலர் சொர்ணம் மனுவேற்பிள்ளை.
யா/உ/1503 திரு.சின்னத்தம்பி சிவலிங்கம்.
யா/உ/1506 திரு.பொன்னையா சுந்தரம்பிள்ளை.
யா/உ/1512 திரு.சீனிக்குட்டி சுப்பிரமணியம்.
யா/உ/1522 திருமதி.சந்திரகாந்தியம்மா விஜயசிங்கம்.
யா/உ/1525 திரு.தம்பு சிவஞானசுந்தரம்.
யா/உ/1529 திரு.ஐயாத்துரை தம்பிராசா.
யா/உ/1532 திரு.கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/உ/1533 திரு.கந்தையா தம்பிராசா.
யா/உ/1544 திரு.இளையதம்பி துரையப்பா
யா/உ/1558 திரு.நாகலிங்கம் ஆறுமுகராசா.
யா/உ/1565 திரு.தம்பையா அரியரத்தினம்.
யா/உ/1566 திருமதி.அம்பிகாதேவி சிவப்பிரகாசம்.
யா/உ/1583 திரு.காசிப்பிள்ளை கணேசபிள்ளை.
யா/உ/1590 திருமதி.கமலாட்சி சரவணமுத்து.
யா/உ/1595 திரு.கந்தர் காசிப்பிள்ளை.
யா/உ/1598 திரு.குழந்தைத்தம்பி முருகையா.
யா/உ/1609 திரு.வயிரவிப்பிள்ளை நடராஜா.
யா/உ/1611 திரு.பொன்னு நடராசா.
யா/உ/1614 திருமதி.பூமணி நடராஜா.
யா/உ/1618 திரு.வேலுப்பிள்ளை பொன்னுத்துரை.
யா/உ/1620 திரு.நன்னித்தம்பி பொன்னம்பலம்.
யா/உ/1623 திருமதி.புனிதவதிஅம்மா சண்முகராசா.
யா/உ/1625 திருமதி.பத்மாசினிதேவி சீவரத்தினம்.
யா/உ/1636 திரு.நடராசா இரத்தினராசா.
யா/உ/1637 திரு.தம்பையா சுந்தரம்பிள்ளை.
யா/உ/1640 திருமதி.சிவகாமிப்பிள்ளை இளையதம்பி.
யா/உ/1641 திரு.வேலுப்பிள்ளை சண்முகநாதன்.
யா/உ/1642 திரு.சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளைதிருஞானசெல்வம்.
யா/உ/1647 திரு. நமசிவாயம் சுந்தரலிங்கம்.
யா/உ/1650 திருமதி.சறோஜினிதேவி சுப்பிரமணியம்

தொடரும்...

# கேள்வி கோரல்கள்

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

***சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி வழங்கலினூடாக இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் புனர் நிர்மாணத்தை செயற்படுத்தும் திட்டத்திற்கான (STAART) கேள்வி கோரல் அறிவித்தல்.***

## உள்ளூர் போட்டிக்குரிய கேள்விக்கோரல்க்கள்

பின்வரும் வேலைத்திட்டத்திற்கான மூடிய கேள்விகோரல்கள் மாகாணப் பணிப்பாளர் கேள்விச்சபையின் சார்பாக மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சேர்க்கப்பட வேண்டும்.

பருத்தித்துறை கிழக்கு கடற்கரைவீதி மீள் கட்டுமானம்.

(01). மீள் கல்விரித்து உயர்த்தி தார் ஊற்றல்(ஏற்கனவே உள்ள கற்களை பயன்படுத்தி) 0.8-2.0 கி.மி.

(02). தார் ஊற்றி சீர் செய்தலும்-மீள தார் ஊற்றுதலும்.

(03). பாலம் (இல2/1)மீளக் கட்டுதல்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் நடைமுறை 06.10.2005 அன்று பிற்பகல் 2.00மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(01). மாகாணப்பணிப்பாளர் வ-கி(வ) அலுவலகம் கடற்கரைவீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

(02). பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

(03). மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு) அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி வீதி, வவுனியா.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 05.09.2005 தொடக்கம் 05.10.2005 வரை மீள் அளிக்கமுடியாத வைப்புத்தெகையான 750.00(பொறுமதிசேர் வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற வேண்டும்.

தகுதிவாய்ந்த கேள்விகோரல்களை கோருபவர்கள் பின்வரும் தகைமை பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

01) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் தரம் M-6 இல் அல்லது அதற்கு மேல் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

02) கேள்வி கோரல் விலை கோருபவர் இலங்கை தேசிய நிர்மாணசங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

03) கேள்வி கோரல் ஆவணங்களை பின்வரும் அலுவலகங்களில் இலவசமாக பார்வையிட முடியும்.

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.

மாகாணப்பணிப்பாளர் வ-கி(வ) அலுவலகம், கண்டி வீதி, வவுனியா அல்லது பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

04) முன்கேள்விகோரல் கூட்டம் 12.09.2005 அன்று காலை 10.00 மணிக்கு மாகாணப்பணிப்பாளர் வ-கி. (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05) கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்விகோரல் முடிவுத்திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

06) கேள்விப்பாதுகாப்புப் பணமான ரூபா 60,000/= உரிய பாதுகாப்பு பத்திரம் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும்.

ஏற்றுக் கொள்ளக்கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07) மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு)வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாண காரியாலயத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட முடிவுக்காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08) கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கடற்கரைவீதி யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

09) கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலதிக விபரங்களை பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
| --- | --- |
| மாகாணப்பணிப்பாளர் வ-கி(வ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். | 021-2222517 |
| மாகாணப்பணிப்பாளர் வ-கி(வ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டிவீதி, வவுனியா. | 024-2222826 |
| ***அல்லது*** | |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021-2222968 |
| மாகாணப்பணிப்பாளர் வ-கி(வடக்கு), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். | |

(சி.12663)

## "ஏசியன் றிபூயுன்" இணையத்தளத்திடம் எஸ்.பி. ரூ 300 மில். இழப்பீடு கோரல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் எஸ்.பி திஸாநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க குறித்து அவதூறுச் செய்திகளை வெளியிட்ட ஏசியன் றிபூயுன் இணையத்தளம் மீது எஸ்.பிதிஸாநாயக்க சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

தனது வழக்கறிஞர்கள் மூலம் அனுப்பிய நீதிமன்ற மனுவில் பொய்ச் செய்தி வெளியிட்டமைக்காக ரூபா.300 மில்லியன் நட்டஈடு அளிக்க வேண்டும் என்று எஸ்.பி. திஸாநாயக்க கோரியுள்ளார்.

தனது பெயருக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் தனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியதால் இந்த மனுவை சமரத்தன அசோசியேட்ஸ் மூலம் எஸ்.பி திஸாநாயக்க அனுப்பி வைத்துள்ளார்.

# சாவு அறிவித்தல்

## நாகமுத்து பரராஜசிங்கம்(சொக்கர்)

**(முன்னாள் திருமலை வர்த்தகர்)**

புங்குடுதீவு மடத்து வெளியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.நாகமுத்து பரராஜசிங்கம் (திருகோணமலை முன்னைநாள் வர்த்தகரும், சமூக சேவையாளரும்) 02.09.2005 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் காலம் சென்றவர்களான நாகமுத்து செல்லமுத்து தம்பதிகளின் புதல்வரும், தில்லையம்பலம் செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும், சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகலிங்கம்(தலைவர் புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ.ச), பாலசரஸ்வதி (கொழும்பு), பாலசுலோசனா (கனடா), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன் (BACC.HONS C.G.A கனடா), நிதீஸ்வரன் (கனடா), நதீஸ்வரன் (கனடா), பானுரேகா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையாரும் நாகேஸ்வரி, நவரெத்தினசிங்கம் (கொழும்பு), தவேந்திரராசா (கனடா), அல்லி(கனடா), ஸ்ரீதேவி (கனடா), ரூபிகா (கனடா), ரமணன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலம் சென்றவர்களான கைலாயநாதர், இராமலிங்கம், செல்லம்மா, கண்மணி, உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலியுகா,கமல், நிர்மல், விமல், வித்தியா, விதுனா, தனுசியா, சிந்து, கௌசிகன், யமி, அனீரா, அஜன், நிதீசன், நிதீசா, றுனீஸ்சன், அபினிசா ஆகியோரின் அன்புப் பேரனும் கனகம்மா, செல்லத்துரை, நமசிவாயம், இராசம்மா, சின்னத்தங்கம், கந்தையா, பொன்னாச்சி, சபாரெத்தினம், புஸ்பவதி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 06.09.2005 (செவ்வாய்க்கிழமை) அன்று நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*புங்குடுதீவு-நயினாதீவு ப.நோ.கூ.சங்கம்,*
*21 ஆனைக்கோட்டைவீதி,*
*குளப்பிட்டிச்சந்தி,கொக்குவில்.*
*தொலைபேசி:- 0776201567*

*தகவல்:-*
*ப.கனகலிங்கம் (மகன்)*
*தலைவர்*
*யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.*

*(5389)*

# 1ம் ஆண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 | 04 |
| 12 | 09 |
| 27 | 95 |



**றியோ இரத்தினம்**
**(நாகலிங்கம் இரத்தினம்)**
**புளியங்கூடல்.**

பத்து மாதம் சுமந்தாளே அம்மா
பாரை விட்டு அகலும்வரை நெஞ்சில் சுமந்தீரே
பாரில் நாம் உள்ளவரை
நினைவலையில் மிதப்போம்.

விசுவமடு
றியோ.
*(6684)*

பிரிவால் துயர்உறும்
அன்புநெஞ்சங்கள்.

# பணிநிலை வெற்றிடத்திற்கான நேர்முகத்தேர்வு

155 ஆம் கட்டை பாரதிபுரம் கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆய்வு அபிவிருத்தி நடவடிக்கை நிறுவன தலைமைப்பணிமனையில் AUP திட்டத்திற்கு (21 மாதங்கள்) கீழ் குறிப்பிடப்படும் பணிநிலைக்கு ஆளணி நியமிப்பது தொடர்பான நேர்முகத்தேர்வு 07.09.2005, 08.09.2005 திகதிகளில் புதன்கிழமை,வியாழக்கிழமை ஆகிய இரு நாட்களும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் நடைபெறவுள்ளதனால் கீழ் குறிப்பிடப்படும் தகைமையுடையோர் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**(01) தொழில் நுட்ப உத்தியோகத்தர்:-**

I. அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப சான்றிதழ்.
II. கல்வித்தகைமைச் சான்றிதழ்.
III. ஆகக் குறைந்தது 5 வருடங்கள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
IV. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருக்க வேண்டும்.
V. ஏனைய தகுதிகள் இருப்பின் விரும்பத்தக்கது.

**(02) சிரேஷ்ட வெளிக்கள அலுவலர்:- 03**

I. கல்விச் சான்றிதழ்.
II. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
III. ஆங்கிலம் பேச, எழுதத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
IV. அனுபவச் சான்றிதழ்.
V. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(03) நிதி முகாமையாளர்:- 02**

I. கல்விச் சான்றிதழ்
II. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
III. ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருத்தல் வேண்டும்.
IV. அனுபவச் சான்றிதழ்.
V. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(04) வெளிக்கள அலுவலர்:- 08**

***கல்வித்தகைமைகள்:-***

I. க.பொ.த.உ/த கற்றிருத்தல் வேண்டும்.
II. முன்னனுபவம் இருத்தல் வேண்டும்.

*வயதெல்லை:-* 25 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(05) உளவள/பாலின உதவியாளர் :- 03**

I. இத்துறையில் ஆகக்குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றிய முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.
II. க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 20 வயது தொடக்கம் 40 வயது வரை.

**(06) நிர்வாக உதவியாளர்கள்:- 02**

I. க.பொ.த.சா/த சித்தியடைந்திருத்தல்.
II. நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 45 வயது வரை.

**(07) களஞ்சியப் பொறுப்பாளர்:- 02**

I. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகப்பிரிவில் பயின்றிருத்தல் வேண்டும்.
II. ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகள் ஏதாவது நிறுவனத்தில் கடமையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 50 வயது வரை.

**(08) கணக்குப்பதிவாளர்:- 02**

I. க.பொ.த. உயர்தரத்தில் வர்த்தகம் பயின்றிருத்தல் வேண்டும்.
II. கணக்கியலில் திறமைச்சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
III. ஆகக்குறைந்தது இரண்டு ஆண்டுகள் கடமையாற்றிய அனுபவமிருத்தல் வேண்டும்.
IV. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 20வயது தொடக்கம் 40 வயது வரை.

**(09) சமூக அலுவலர்கள்:- 08**

I. க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
II. ஆகக்குறைந்தது இரண்டு வருடங்களாயினும் கடமையாற்றிய அனுபவமிருத் தல் வேண்டும்.
III. ஏனைய தகைமைகள் இருப்பின் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 25வயது தொடக்கம் 40 வயது வரை.

**(10) காவலாளிகள்:- 03**

I. 08 ஆம் தரம் பயின்றிருத்தல் வேண்டும்.
II. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 40 வயது வரை.

**(11) பராமரிப்பாளர்கள்:- 03**

I. ஆகக்குறைந்தது 05 ஆம் ஆண்டு பயின்றிருத்தல் வேண்டும்.
II. நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
III. முன் அனுபவம் விரும்பத்தக்கது.

*வயதெல்லை:-* 30வயது தொடக்கம் 50 வயது வரை.

***குறிப்பு :-***

01. இருபாலாரும் நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கலாம்.
02. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
03. இத்திட்டம் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதால் அந்தந்த மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(சி.12660)

## அறிவித்தல்

முல்லைத்தீவு மாவட்டத்தில் "வணிக கைத்தொழில் விவசாய சம்மேளனம்" (Chamber of Commerce,industry & Agriculture ) தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்மேளனத்தில் உறுப்பினர்களை இணைத்துக் கொள்வதற்கான ஒன்று கூடல் 2005. 09. 04 இன்று காலை 10. 00 மணிக்கு நிதித்துறை வணிக ஒன்றியப் பணிமனை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. உறுப்பினராக இணைந்துகொள்ள விரும்புபவர்களை, ஆர்வமுடையவர்களை இவ்வொன்று கூடலில் கலந்துகொள்ள வருமாறு அழைக்கின்றோம்.

ஒழுங்கமைப்புக்குழு,
வணிகக் கைத்தொழில் விவசாய சம்மேளனம்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி.12666)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### நடத்துநர் பணிக்கானவிண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்**

01. கல்வித்தகைமை:- ஆண்டு 10.
02. அகவை:- 21தொடக்கம் 35 வரை.
03. உயரம்:- 05அடி 05அங்குலம்.

**குறிப்பு:-**

01.விண்ணப்ப முடிவு நாள்:- 15.09.2005
02.சம்பளம் :- $\frac{4,430\text{-}5,530}{10\times110}$ +2,700.00=7,130.00+சிறப்புக்கொடுப்பனவு =9,430.00
03.விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு:- 18.09.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
04.நேர்முகத்தேர்வுக்கு வருகைதருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05.விண்ணப்ப படிவங்களை முல்லைத்தீவு,புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி: -**
**முகாமையாளர்,**
**ஆளணி ஆளுமைப் பகுதி,**
**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**நடுவப்பணிமனை,**
**விசுவமடு.**

(சி.12670)

# பதவி வெற்றிடம்

யுனிசெப் நிதி உதவியுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு வருடகால ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✦ பதவி:- பொறியியலாளர்.
கல்வித்தகைமை:- B.SC(Civil) பொறியியலாளர் அல்லது அதற்கு சமனான தகைமையுடன் கணனி அறிவு.
அனுபவம்:- குறைந்தது 3 வருட தொழில்சார் அனுபவம்.
சம்பளம்:- ரூபா 26,000 (ஊழியர் சேமலாப நிதி நீங்கலாக).

✦ பதவி:- திட்டமிடல் கண்காணிப்பு இணைப்பாளர்.
கல்வித்தகைமை:- தொழில் நிர்வாகமாணி அல்லது வர்த்தகமாணிஅல்லது கலைமாணி(பொருளியல்/புள்ளியியல் சிறப்புப்பட்டதாரி)
அனுபவம்:- குறைந்தது 1 வருட தொழில்சார் அனுபவம்.
சம்பளம்:- ரூபா 22,000 (ஊழியர்சேமலாப நிதி நீங்கலாக)

✦ பதவி:- கணனி தரவு பதியுநர்
கல்வித்தகைமை:- கணனி விஞ்ஞானமானியாக அல்லது அங்கீகரிக்கப் பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து கீழ்வரும் கல்விக் கான சான்றிதழும், தொழில் அனுபவமும் இருத்தல் வேண்டும்.

* MS Office.
* Database Management.
* Client Server Administration.
* Computer Maintenance/Hardware.

✦ சம்பளம்:- ரூபா 17,000 (ஊழியர் சேமலாப நிதி நீங்கலாக)

*இப்பதவி நிலை முற்றிலும் ஒப்பந்த அடிப்படையிலானது. இந் நியமனத்தை அடிப்படையாகக் கொண்டு நிரந்தர நியமனம் கோரமுடியாது.*

*தகைமையுடையவர் சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை தங்களது சுய விபரத்துடன் அரசாங்க அதிபர் ,மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 15. 09. 2005 இற்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

*விண்ணப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.*

*தி. இராசநாயகம்,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி.12664)



சென்யூட் வி.கழகம்



தோழர்கள் வி.கழகம்

— கிளி. மாவட்ட அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் —

# 15 ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டி

# அரையிறுதிப் போட்டிகளை எட்டின



கனகபுரம் வி.கழகம்



வெற்றி பெற்ற இளந்தாரகை வி.கழகம் கைலாகு கொடுக்கையில்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை உள்ளடக்கி கிளி. மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் நடாத்திவரும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

தருமபுரம் இளம்தாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றுவரும் மேற்படி போட்டியில் சென்யூட், தோழர்கள், கனகபுரம், இளம்தாரகை விளையாட்டுக்கழகங்களே அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய கழகங்களாகும்.

இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் சென்யூட் வி.கழகமும், நியூஸ்ரார் வி.கழகமும் மோதின. இதில் முதலில் ஆடிய சென்யூட் வி.கழகம் 14.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குகநேசன் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய நியூஸ்ரார் வி.கழகம் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் ராஜ் 18 ஓட்டங்களைப் பெற்றார.

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் தோழர்கள் வி.கழகமும், கிருஸ்ணபாரதி வி.கழகமும் மோதின. முதலில் ஆடிய தோழர்கள் வி.கழகம் 13.2 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 69ஓட்டங்களைப்பெற்றது. இதில் சுகந்தன் 25 ஓட்டங்களைப்பெற்றார். பந்து வீச்சில் பார்த்தின் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு ஆடிய கிருஸ்ணபாரதி வி.கழகம் 13.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்களைப் பெற்று தோல்வியைத் தழுவியது. இதில் பார்த்தின் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் தர்மேந்திரா நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

மூன்றாவதாக நடைபெற்ற போட்டியில் கனகபுரம் வி.கழகமும், சோலை வி.கழகமும் மோதின. முதலில் ஆடிய கனகபுரம் வி.கழகம் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரமணன் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும், காண்டீபன் 24 ஓட்டங்களையும், அனுசன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு ஆடிய சோலை வி.கழகம் 12.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கீரன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ரமணன், அலன் தலா மூன்று விக்கெட்டுக் களை கைப்பற்றினர்.

அடுத்து நான்காவதாக நடைபெற்ற போட்டியில் ஸ்கந்தா வி.கழகமும், இளந்தாரகை வி.கழகமும் மோதின. முதலில் ஆடிய ஸ்கந்தா வி.கழகம் 13.3 ஓவர்கள் நிறைவில் 56 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் யோகீசன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இளந்தாரகை வி.கழகம் ஒரு விக்கெட்டை இழந்து இலக்கை அடைந்தது. இதில் சாரங்கன் 31 ஓட்டங்களையும், பிரபு ஆட்டமிழக்காது 25 ஓட்டங்களையும் பெற்றனர். இப்போட்டிக்கு நடுவர்களாக சுபானந், குமார், லெனின் ஆகியோர் கடமையாற்றினர்.

(சு)

# அமெ. ஓபன் டெனிஸ்

# சானியா, ஷரபோவா மோதல்



அமெரிக்க, ஓபன் டெனிஸ் தொடரின் நான்காம் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை எதிர்கொள்கிறார்.

நியூயோர்க்கில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் மூன்றாம் சுற்றுப் போட்டியில் 18 வயது சானியா மிர்சா, பிரான்சின் 19 வயது மரியான் பர்டோலியைச் சந்தித்தார். முதல் செட்டில் கடும்போராட்டம் நீடிக்க,டை-பிரேக்கர் வரை சென்றது. உலக தரவிசை பட்டியலில் 42 ஆவது இடத்தில இருக்கும் சனியா டை- பிரேக்கரில் அபாரமாகச் செயற் பட்டு வெற்றியை (7-4) தனதாக்கினார். அடுத்த செட்டில் உலக தரவிசை பட்டியலில் 43 ஆவது இடத்தில் உள்ள பர்டோலிக்கு கால் வலி ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு முழுமையாக ஆதிக்கம் செலுத்திய சானியா 76 (7-4), 6-4 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்றார். இதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் டெனிஸ் வரலாற்றில் நான்காவது சுற்றுக்கு முன்னேறும் முதல் இந்திய வீராங்கனை என்ற சாதனை படைத்தார். இவ் வெற்றியை ஈட்ட இவர் சுமார் ஒரு மணி நேரம் 35 நிமிடங்கள் போராடி வென்றார். 2003 இல் விம்பிள்டன் ஜூனியர் இரட்டையரில் சாம்பியன் பட்டம் வென்ற சானியா, இம்முறை அமெரிக்க, ஓபன் ஒற்றையரில் சாதிக்க காத்திருக்கிறார். இவர் நான்காவது சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை சந்திக்கிறார்.இது பற்றி சானியாவின் பயிற்சியாளர் ஜான் பாரிங்டன் கூறுகையில், "மரியாவுக்கு எதிரான போட்டியில் சானியா நிச்சயமாக சாதிப்பார்.

அவரை ஷரபோவா சமாளிக்க சிறப்புத்திட்டம் வகுத்துள்ளோம்," என்றார்.

மற்றொரு மூன்றாம் சுற்றுப் போட்டியில் இத்தொடரின் முதல்தர வீராங்கனையான ரஷ்யாவின் மரிய ஷரபோவா, ஜெர்மனியின் ஜுலியா ஸ்கிரவை எதிர்த்து களமிறங்கினார். அசுர வேகத்தில் சர்வீஸ் போட்ட மரியா 6-2, 6-4, என்ற செட்களில் வெற்றி பெற்று நான்காம் சுற்றுக்கு முன்னேறினார்.

# 37 மில்லியன் பவுணுக்கு மைக்கல் ஓவனை வாங்கியது நியுகாஸல் கால்பந்து கழகம்

இங்கிலாந்தின் பிரபல கால் பந்தாட்ட வீரான மைக்கல் ஒவன் நியுகாஸல் அணிக்காக விளையாட 17 மில்லியன் பவுணுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார். நான்கு வருடங்களுக்கு செய்து கொள்ளப்பட்டுள்ள இவ்வளவு தொகைக்கான ஒப்பந்தம் வேறெந்த வீரரும் இதுவரை செய்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

லிவர்பூல் அணியின் வீரரான ஓவன், றியல் மெட்றிட் அணிக்காக ஆடுவதற்காக எட்டு மில்லியன் பவுணுக்கு ஒப்பந்தம் செய்திருந்தார். எனினும் அவரின் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் நியுகாஸல் அணி அவரை 37 மில்லியனுக்கு ஒப்பந்தம் செய்துள்ளது.

இதன் மூலம் நியுகாஸல் கழகம் அலன் ஷெரரேயை 15 மில்லியனுக்கு ஒப்பந்தம் செய்திருந்ததை இவர் முறியடித்துள்ளார்.

# அவுஸ்திரேலியா ஆஷஸ் கிண்ணத்தைத் தக்க வைக்கும்

## முன்னாள் அணித்தலைவர் கூறுகிறார்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஆஷஸ் கிண்ணத்தை தக்க வைத்துக்கொள்ளும் என தான் நம்புவதாக முன்னாள் அவுஸ்திரேலிய சகலதுறை வீரரும் அணித்தலைவருமான றிக்கி பெனாட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரும் எட்டாம் திகதி ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகும் ஐந்தாவதும் இறுதியும் தீர்க்கமான துமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெறுவதுடன் தொடரை சமன் செய்யும் எனத் தெரிவிக்கும் பெனாட் 16 வருடமாக கட்டிக்காக்கும் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என்றார்.

74 வயதாகும் பெனாட் 1950 முதல் 60 வரையான காலப்பகுதியில் மூன்று முறை கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த அணித்தலைவராவார். இவர் இரண்டாயிரம் ஓட்டங்களையும் இருநூறு விக்கட்டுக்களையும் பெற்றுள்ளார்.

எவ்வாறேனும் இங்கிலாந்து இத்தொடரை வென்றால் 1986க்குப் பின் ஆஷஸ் கிண்ணத்தை இழந்த முதல் அவுஸ்திரேலிய அணித்தலைவர் என்ற பெயரை றிக்கி பொண்டிங் பெற்றுவிடுவார் என்று தெரிவித்துள்ள பெனாட் நான்காவது போட்டியில் இவருக்கு ஆட்டஇழப்பு (ரன் அவுட்) தீர்ப்பை வழங்கிய றஞ்சன் மடுகஸ்லவின் முடிவை ஏற்றுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா-நியுசிலாந்து போட்டியில் சாதனைகள்

நேற்று முன்தினம் ஹராரேயில் நடைபெற்ற இந்திய -நியுசிலாந்து அணிகள் பங்குபற்றிய வீடியோகோண் முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் ஒன்றிரண்டு சாதனைகளைப் பெற்றனர். அந்த வகையில் ராகுல் ராவிட் நியுசிலாந்து அணிக்கெிராக மட்டும் ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரரானார். இதேவேளை நியுசிலாந்து கிரேக் மக்மிலன் நான்காயிரம் ஓட்டங்களையும் ஸ்கொட் ஸ்டைரிஸ் இரண்டாயிரம் ஓட்டங்களையும் பூர்த்திசெய்தனர். இந்திய விரர் மொகமட் கைப் 95 ஒரு நாள் போட்டிகளில் 76 போட்டிகளுக்குப்பின் சதம் அடித்துள்ளார்.

ஹராரே மைதானத்தில் 279 ஓட்டங்கள் என்ற பாரிய வெற்றியிலக்கை துரத்திப் பிடித்து இந்தியா வெற்றி பெற்றதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

நாளை மறுதினம் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா நியுசிலாந்தை சந்திக்கும். இதற்கிடையில் இறுதி லீக் ஆட்டத்தில் சிம்பப்வே இந்திய அணிகள் இன்று மோதுகின்றன.

# ஆசிய தடகளப் போட்டியில் இந்தியாவுக்குப்பதக்கங்கள்

தென்கொரிய நாட்டிலுள்ள இன்சியான் நகரில் ஆசிய தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.


நேற்று முன்தினம் இந்தியாவுக்கு முதல் தங்கப்பதக்கத்தை 27 வயதான வீராங்கனை சோமா பிஸ்வாஸ் பெற்றுத் தந்தார். அவர் ஹெப்டத்லான் போட்டியில் 5377 புள்ளிகள்பெற்று அந்தப்பிரிவில் சாம்பியன் ஆனார்.இவர் கொல்கத்தாவைச் சேர்ந்தவர்

இன்னொரு கொல்கத்தா வீராங்கனை சுஷ்மிதா இதே ஹெப்டத்லான் போட்டியில் 5308 புள்ளிகளைப் பெற்று இரண்டாவதாக வந்தார் . அவருக்கு வெள்ளிப்பதக்கம் கிடைத் தது. தாய்லாந்து வீராங்கனை மஸிம் 5279 புள்ளிகளைப் பெற்று மூன்றாவதாக வந்தார். அவருக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.


நேற்று முன்தினம் இந்தியாவுக்கு இன்னொரு பதக்கமும் கிடைத்தது. அதைப்பெண் களுக்கான தட்டு எறிதல் போட்டியில் கிருஷ்ண புண்ணியா பெற்றுக் கொடுத்தார் அவர் 57.67 மீற்றர் தூரம் தட்டு எறிந்தார். அவருக்கு வெண்கலப்ப தக்கமும் கிடைத்தது. கிருஷ்ண புண்ணியா வுக்கு 23 வயதாகிறது. நேற்று அவர் தனது ஐந்தாவது முயற்சியில் இந்த 57.67 மீற்றர் தூரத்துக்கு வீசி பதக்கம் வென்றார்.

இந்திய வீரர் அணில்குமார் 100 மீற்றர் ஓட்டத்தில் ஆறாவது இடத்தைப் பிடித்தார். மொத்தம் ஏழு பேர் பங்கேற்ற இப்போட்டியில் இவர் 10.61 வினாடியில் இந்தத் தூரத்தைக் கடந்தார். அவர் இதற்கு முன்பு டில்லியில் கடந்த வாரம் தடகளப் போட்டியில் கலந்து கொண்ட போது 100 மீற்றர் தூரத்தை 10.30 வினாடியில் கடந்தார்.இப்போது அதேதிறமை யை வெளிப்படுத்தியிருந்தால் தங்கப்பதக்கம் வென்றிருப்பார். ஏனென்றால் சவுதி அரேபிய வீரர் அல்கீஸ் 10.33 வினாடியில் 100 மீற்றரைக் கடந்து தங்கப்பதக்கம் வென்றார். ஜப்பான் வீரர் சிங்கோ சுட்சுகு 10.42 வினாடியில் கடந்து வெள்ளிப் பதக்கமும், கட்டார் நாட்டு வீரர் காலித் யூசுப் 10.45 வினாடியில் கடந்து வெண்கலப் பதக்கமும் வென்றார்கள்.

விளையாட்டு



ஆசியன் அதலட்டிக்ஸ் ஹெப்டத்லான் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை சோமா பிஸ்வாஸ்.



### சிந்தனைக்கு

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் எமது இனக்கட்டமைப்பைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 04.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## தவறான வழிக்கு.....!

சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு இடத்தைத் தெரிவு செய்வதில் நோர்வேத்தரப்பு ஈடுபட்டுவருவதாக வெளியாகியுள்ள தகவல்கள் நோர்வேத்தரப்பும் தமிழ்மக்களுக்கு போலியான நம்பிக்கைகளை ஊட்ட முற்பட்டுள்ளதா? என்ற சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாகவுள்ளது.

ஏனெனில் யுத்தநிறுத்த அமுலாக்கம் பற்றிப் பேச்சுக்களை வெளிநாடுகளில் நடத்துவதை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் நிராகரித்து விட்டதோடு, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் நடத்துவதற்கும் தயாராக இல்லை என உறுதிபடக் கூறிவிட்டது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான பேச்சுக்களை நடத்துவதற்கு மூன்றாவது இடம் ஒன்றைத் தேடுவதென்பது சாத்தியப்பாடானதல்ல. ஏனெனில் சிறிலங்கா அரசாங்கம் ஒஸ்லோவில் பேச்சுவார்த்தை நடத்துவதை மட்டும் நிராகரிக்கவில்லை. வெளிநாடுகள் எதிலுமே பேச்சுவார்த்தை நடத்தவிரும்பவில்லை என்றே கூறியுள்ளது. இதனை நோர்வேத் தரப்பு விளங்கிக்கொள்ளாமல் இருக்க முடியாது.

யுத்தநிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகிய பின்னர் சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பல சுற்றுப்பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. இப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் காணப்பட்டதோ இல்லையோ பேச்சுவார்த்தைகள் மிகவும் சுமுகமான முறையில்- எதுவித அசம்பாவிதங்களும் இன்றி முடிவடைந் திருந்தமை அனைவருக்கும் தெரிந்ததே.

இத்தகைய நிலையில் சந்திரிகா அரசாங்கம் ஏன் வெளிநாடு ஒன்றில் பேச்சுவார்த்தை நடாத்தப்படுவதை நிராகரிக்க வேண்டும்? வெளிநாட்டில் பேச்சுவார்த்தை நடத்துவதால் பொருளாதார விரயம் ஏற்படும் என்பதினாலா? அன்றி விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிடும்/ அதிகரித்துவிடும் என்பதினாலா? இதில் ஒன்றைத்தவிர சிறிலங்கா அரசாங்கம் எதையும் கூறமுடியாது. ஆனால் இவ்விரண்டு காரணங்களும் கூட அர்த்தமற்றவையே.

ஏனெனில் பேச்சுவார்த்தைக்கான செலவீடு என்பது சிறிலங்கா அரசு வீண்விரயம் செய்யும் பணத்தின் ஒரு சிறு பகுதி என்பது மட்டுமல்ல, பேச்சுக்களுக்கான முழு செலவீட்டையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்வதும் இல்லை. இந்நிலையில் செலவீடு பற்றிப் பேசுவதும் சிந்திப்பதும் அர்த்தமற்றது. அடுத்ததாக விடுதலைப்புலிகளுக்கு தற்போது கிடைத்துள்ள அங்கீகாரத்திற்கு மேலாக இப்பேச்சு வார்த்தையால் ஏதும் கிடைத்துவிடப்போவதில்லை.

ஆகையினால் பேச்சுவார்த்தைகளை வெளிநாடுகளில் நடத்து வதற்கு அரசாங்கம் மறுப்புத்தெரிவிப்பதானது பேச்சுவார்த்தைகளை அரசு விரும்பவில்லை என்பதையே வெளிக்காட்டுவதாகும். இதே வேளை விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளைச் சிறிலங்காவில் நடத்தவிரும்பாமைக்குத் தெரிவிக்கும் காரணங்கள் அர்த்த முள்ளவையாகும்.


அதாவது இலங்கையில் நடைபெறும் அனைத்து வன்முறைச்சம்பவங்களுக்கும் எந்தவிதவிசாரணைகளோ அன்றி ஆதாரங்களோ இன்றி விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டுபவையாக சிறிலங்கா அரசாங்கமும், அதன் ஆயுதப்படையும் இருக்கையில் எவ்வாறு சிறிலங்காவில் சுதந்திரமானதொரு சூழ்நிலையில் பேச்சு வார்த்தைகளை நடத்தமுடியும்?

அதாவது களத்தில் நிகழும் சம்பவங்கள் சந்திப்புக்களின் போது உணர்ச்சிவசப்பட்ட நிலையைத்தோற்றுவிப்பதற்கும் அதன் விளைவாக விரும்பத்தகாத சம்பவங்கள் நிகழ்வதற்கும் வாய்ப் புக்களை அது உருவாக்குவதாகிவிடும். இது சுமுகமான சூழ்நிலையில் பேச்சுக்களை நடத்தவோ அதில் முன்னேற்றம் காணவோ வாய்ப்பை ஏற்படுத்தப்போவதில்லை.

ஆனால் இவை சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரியா தொன்றல்ல.. அவர்கள் நிபந்தனைகள் விதிப்பதற்கு பேச்சு வார்தைக்குத் தயாரில்லை என்பதுதான அர்த்தம் ஆகும். இன்னும் சிறப்பாகக் கூறுவதால் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண அரசாங்கம் விரும்பவில்லை என்பது மட்டுமல்ல, தற்போதைய சூழ்நிலையில்–அதாவது தேர்தல்கள் எதிர்நோக்கப்படும் வேளையில் தமிழ்மக்களின் உரிமை தொடர்பாகப்பேசவோ யுத்த நிறுத்தத்தைச் சீர் செய்யும் வகையிலான பேச்சுக்களை நடத்தவோ அரசாங்கம் தயாராக இல்லை என்பதே நிதர்சனமானதாகும்.

இது நோர்வேத்தரப்பிற்கும் தெரியாததல்ல. ஆகையினால் நோர்வேத்தரப்பு பேச்சுவார்த்தைக்குப் புதிய இடம் தேடுதல், சம்மதிக்கவைத்தல் என்பது போன்று வெளியிடும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்குப் போலியானதொரு நம்பிக்கையை ஊட்ட முற்படுவதாகவே சொல்ல வேண்டியிருக்கும். ஏனெனில் சிறிலங்கா அரசு யுத்தத்திற்குத் தயாராக உள்ளதோ இல்லையோ பேச்சுவார்த்தைக்கும், யுத்த நிறுத்தத்தைச் செம்மையாகப்பேணவும் அது தயாராக இல்லை என் பதே யதார்த்தமாகும்.

இந்நிலையில் பேச்சுக்கள் நடத்த இடம் தேடப்படுகிறது. பேச்சுக்கள் விரைவில் நடத்தப்படலாம் என்பது போன்ற அறிவிப்புக்களை நோர்வேத்தரப்பு மேற்கொள்வது சிறிலங்கா அரசியல் வாதிகளின் பேச்சு போன்றே கொள்ளத்தக்கது. இது நோர்வேத்தரப்பினர் மீதும், தமிழ் மக்கள் அவநம்பிக்கைகொள்ளத் தக்க சூழ்நிலையை உரு வாக்கிவிடும்.




## ஆழிப்பேரலை விவாதத்தில் பங்கேற்காத பிரதமர் அமைதிப் பேச்சுக்களை எவ்வாறு நடத்துவார்?

### ஐக்கிய தேசியக் கட்சி செயலாளர் கேள்வி

ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்புத் தொடர்பான பாராளு மன்ற விவாதத்தில் பங்கேற்காத பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அமைதிப் பேச்சுக்களை எவ்வாறு மீண்டும் தொடருவார் என்று ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு ஐ.தே.க துணைச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அளித்த நேர் காணலில்,

நாட்டின் பொருளாதாரம், யுத்த நிறுத்த ஒப்பந்தம், ஆழிப்பேரலை பொதுக் கட்டமைப்பு, தனியார் மய மாக்கல் உள்ளிட்ட விடயங்களில் சுதந்திரக் கட்சி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ எவ்வித நிலைப்பாட்டை மேற் கொள் ளப் போகிறார் என்பதை வெளிப் படுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தத் தயார் என்று மகிந்த ராஜபக்ஷ கூறி வரு கிறார். எந்த அடிப்படையில் இந்தப் பேச்சுக்களை நடாத்துவார் என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

இத்தகைய அறிவிப்புக்கள் மூலம் சர்வதேச சமூகத்திடம் தவறான புரிதலை ஏற்படுத்த மகிந்த ராஜபக்ஷ முனைகிறார்.

ஜே.வி.பியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் அமைதிப் பேச் சுக்களை எதிர்த்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத் தப்பட்டதற்காக கண்ணீர் வடித்த வர்கள்.

சந்திரிகா குமாரதுங்கவை ஆட்சிப் பொறுப்பில் அமர்த்துவதற்காக 1994 ஆம் ஆண்டு பாதயாத்திரை நடத்திய மகிந்த ராஜபக்ஷதான் நாட்டின் இன்றைய சூழ லுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

தேர்தலில் தனித்துப் போட்டி யிட்டு இரண்டு இலட்சம் வாக்குகளை ஜே.வி.பியினால் பெற்றுவிட முடியுமா என்றும் திஸ்ஸ அத்த நாயக்க கேள்வி எழுப்பினார்.

## பகிடி வதையால் பாதிக்கப்பட்ட பிக்குமாணவர் வைத்தியசாலையில்

சிறிலங்காவின் மிகிந்தளை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நான்கு மூத்த பிக்கு மாணவர்களினால் மோசமாக பகிடிவதைக்கு உள்ளாக்கப்பட்ட தாகக் கூறப்படும் பிக்கு மாணவர் ஒருவர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

29 வயதான தியபதுவே ரத்னசார என்ற பிக்குவே பகிடிவதைக்கு இலக்காகிஅனுராதபுரம்தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீரிழிவு நோயாளி என அவர் கூறிய போதிலும் பிக்கு மாணவர்கள் அதனைக் கருத்தில் எடுக்காது உடல் ரீதியாகத் தன்னை துன்புறுத்தியதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பிக்கு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மிகிந்தளை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளார். ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் இம்மாத தொடக்கத்தில் இணைந்த தன்மீது கடந்த பத்தாம் திகதி முதல் மாணவர்கள் பகிடி வதைகளை மேற்கொண்டதாக அவர் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் காலத்தில் பொலிசாரின் இடமாற்றங்கள் நிறுத்த பொலிஸ் ஆணைக்குழு முடிவு

சிறிலங்கா சனாதிபதித் தேர்த லுக்கு வேட்பு மனுக் கோரப்படும் தினத்திற்கும் தேர்தல் நடைபெறும் தினத்திற்கும் இடையில் பொலிஸ் துறையில் இடமாற்றங்களை இடை நிறுத்துவதற்கு பொலிஸ் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது

இந்தக் காலப்பகுதியினுள் இடமாற்றங்களை மேற்கொண்டால் அது தேர்தலில் அச்சுறுத்தலை ஏற்படுத்த இடம் உள்ளது. என்பதைக் கருத்தில் கொண்டு இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

எனினும் ஒழுங்கீன நட வடிக்கைகளுக்காக மேற்கொள் ளப்படும் இடமாற்றங்கள் இந்தக் காலப்பகுதினுள் வழமைபோல் இடம் பெறும் என்றும்அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## அநுரா தெரிவிக்கும் கருத்துக்கள் சிறு பிள்ளைத் தனமானவை

*- சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவிப்பு*

நோர்வே அனுசரணையாளர்கள் குறித்து சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அநுர பண்டாரநாயக்க வெளியிட்டு வரும் கருத்துக்கள் சிறு பிள்ளைத் தனமானவை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கடுமையாகச் சாடியுள்ளார்.

வெளிநாட்டு தமிழ்வானொலி ஒன் றுக்கு அவர் அளித்த நேர்காணலில் மேலும் தெரிவிக்கையில்:-

நோர்வே அனுசரணையை இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுக ளும் ஏற்றுக் கொண்டுள்ளன.

அதற்கு மேலாக நோர்வேயை அழைத்து வந்ததே அநுரா பண்டார நாயக்கவின் சகோதரி சந்திரிகாதான்.

இப்படியான நிலையில் நோர் வேயை அநுரா பிழை கூறுவதும் அமைதிப் பேச்சுக்களில் முழுமை யாக ஈடுபட இந்தியாவை அழைப்ப தும் அர்த்தமற்றது.

இத்தகைய செயற்பாடுகளால் அநுர பண்டாரநாயக்க சிந்தித்து செயற் படுகிறாரா என்றகேள்வி எழுகிறது.

அநுரா பண்டாரநாயக்கவின் இந்தக் கருத்துக்கள் சிறு பிள்ளைத் தனமான கருத்துக்களே. அவரது கருத்துக்களில் ஆழ்ந்த அர்த்தங்கள் இருப்பதாக எமக்குப் படவில்லை என்றார்.

## அமெரிக்க சூறாவளி அனர்த்தம் சிறில. 25 ஆயிரம் டொலர் நிதியுதவி

அமெரிக்காவில் கற்றினா சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் நேற்று முன்தினம் 25 ஆயிரம் அமெரிக்க டொலர் உதவிகளை வழங்க உறுதியளித்துள்ளது.

அமெரிக்காவிலுள்ள சிறிலங்கா வைத்தியர்களிடம் பாதிக்கப்பட்ட வர்களுக்காக சேவையாற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளது. அமெரிக்க வரலாற்றிலேயே மிகவும் மோசமான இயற்கை அழிவு ஏற்பட்டிருக்கும் நேரத்தில சிறிலங்கா வழங்கும் உதவிக்கும் அதன் அக்கறைக்கும் நன்றி தெரிவிப்பதாக சிறிலங்கா மற்றும் மாலை தீவிற்கான இயற்கை அனர்த்த விவகாரப் பொறுப்பாளர் ஜேம்ஸ் எப். என்ட்விஸ்ட்டில் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட எமது மக்களுக்காக உதவும் சிறிலங்காவின் செயற்பாடுகள் இரு நாட்டிற்கும் இடையிலான நட்பை வெளிப்படுத்துகிறது என்றும் அவர் கூறினார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தைத் தாக்க 1000 புலிகளுக்கு இரணவிலவில் பயிற்சி

## — சிங்கள ஊடகம் தகவல்

சிறிலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடாத்துவதற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் விமானப்படை மற்றும் புலனாய்வுப் பிரிவு வீரர்கள் பயிற்சி பெற்றுவருவதாக கொழும்பில் வெளியாகும் சிங்கள ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

புத்தளம் இரணவில பிரதேச காட்டுப் பகுதியில் இவர்கள் விசேட பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகச் சந்தேகிக்கக் கூடிய தகவல்கள் சிறிலங்கா புலனாய்வுப் பிரிவிற்குக் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா விமானப்படையில் பணியாற்றிய முன்னாள் தமிழ் அதிகாரியொருவரே இவர்களுக்குப் பயிற்சியளிப்பதாகவும் சிறிலங்கா விமானப்படையில் பணியாற்றி ஓய்வுபெற்ற பல தமிழ் அதிகாரிகளை விடுதலைப் புலிகள் பயிற்சியாளர்களாகப் பல வழிகளிலும் இணைத்துக்கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது எனவும் அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# — சனாதிபதி சந்திரிகாவின் — அமெரிக்காவுக்கான பயணத்தில் ஆறுமுகம் தொண்டமானும்

ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானும் செல்லவுள்ளதாக தெரியவருகிறது.

இம்மாதம் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சந்திரிகா குமாரதுங்க அமெரிக்கா பயணமாகவுள்ளார்.

இம்முறை அவருடன் ஆறுமுகம் தொண்டமானும் செல்லவுள்ளதாகவும் அவருக்கு கிடைத்த விசேட அழைப்பின் பேரிலேயே அவர் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரின் இந்தப் பயணம் தொடர்பில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் நிலவுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவின் அமெரிக்க பயணத்தின் போது வெளியுறவு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் அவருடன் பயணமாவார்.

# மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க ஜே.வி.பி சம்மதம் சந்திரிகா நாடு திரும்பியதும் ஒப்பந்தம்

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்க ஜே.வி.பி சம்மதம் தெரிவித்துள்ளதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிஉறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவிற்கும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் நடைபெற்ற மூன்று சுற்றுப் பேச்சுக்களைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக அக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு தரப்புக்களும் முக்கிய விடயங்களில் விட்டுக் கொடுப்பை மேற்கொண்டே இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக 12 நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டாலே மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்க முடியுமென ஜே.வி.பி நிபந்தனை விதித்திருந்தது தெரிந்ததே.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன் பிரதமரின் இல்லமான அலரி மாளிகையில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரில்வின் சில்வாவிற்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இணக்கப்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப் பேச்சுக்களின் போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மங்கள சமரவீர, சுசில் பிரேமஜயந்த, மைத்திரிபாலசிறிசேன, நிமால் சிறிபாலடிசில்வா ஆகியோரும் ஜே.வி.பி சார்பில் விமல் வீரவன்ச, நந்தனகுணதிலக அனுரகுமார திசாநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சனாதிபதி தனது சீன விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியவுடன் இது தொடர்பாகப் பிரதமர் சனாதிபதி சந்திரிகாவிற்கு விளக்குவார் என எதிர்பார்க்கப்படுவதுடன், இரு கட்சிகளுக்குமிடையிலான உடன்படிக்கையும் அடுத்த வார ஆரம்பத்தில் இடம் பெறும் எனவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது.

# அரசியல் நிபந்தனை அடிப்படையில் எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு விடுதலை?

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக தற்போது சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு நிபந்தனைகளுடன் கூடிய மன்னிப்பை வழங்குவது தொடர்பாக சிறிலங்கா சானதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவிற்கு பயணமாவதற்கு முன்னர் தனது அதிகாரிகளுடன் சந்திரிகா மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளின் போது இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

சீனா சென்று திரும்பும் போது எஸ்.பி தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை தயாரித்து வைக்குமாறு சந்திரிகா தனது அதிகாரிகளுக்கு கூறியிருந்ததாக தெரியவருகிறது.

எஸ்.பி திஸாநாயக்கவை எப்போது விடுதலை செய்வதென இதுவரை இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை. அவரை விடுதலை செய்வதற்கான நிபந்தனை என்னவென்பது பற்றியும் இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை

எனினும் அரசியல் ரீதியான நிபந்தனையே விதிக்கப்படவுள்ளதென உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

எஸ்.பி திஸாநாயக்கவின் விடுதலை குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொறகொட இருமுறை சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து உரையாடியமை குறிப்பிடத்தக்கது.

# சு.க.வின் மத்திய குழுவை சந்திரிகா இன்று அவசரமாகக் கூட்டுகிறார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை சனாதிபதி சந்திரிகா இன்று அவசரமாகக் கூட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் 54 ஆவது பொது மாநாடு எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இன்று முதல் இரண்டு நாட்களுக்குக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தைச் சந்திரிகா கூட்டியுள்ளார்.

இக்கூட்டத்தில் ஜே.வி.பி.யின் ஆதரவைப் பெறுவதில் மகிந்த ராஜபக்ஷவும், மங்கள சமரவீரவும் முனைப்புக் காட்டி வருவது தொடர்பாக விவாதிக்கப்படக்கூடும் என்று சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் பொது மாநாட்டில் சனாதிபதி வேட்பாளராக மகிந்த ராஜபக்ஷவையும், பிரதம வேட்பாளராக அநுரா பண்டாரநாயக்கவையும் அங்கீகரித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்படக் கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சனாதிபதிப் பொறுப்புடன் சந்திரிகாகுமாரதுங்க பங்கேற்கும் கடைசி கட்சி பொதுமாநாடு இதுவாகும்.

## பிற்போடல்

எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட கல்விக்குழு, சுகாதாரக்குழு மற்றும் தீர்மானிக்கப்பட்டிருந்த ஏனைய கூட்டங்களும், தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறாது எனவும் நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கிளிமாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## ஐ.நா...

விடுதலைப் புலிகளை படுகொலை செய்து வருவது.திருமலை புத்தர்சிலை, தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைக்கும் சிங்களப் பேரினவாத நடவடிக்கைகளுக்கு சிறிலங்கா இராணுவமும் பொலிசாரும் ஒத்துழைப்பு அளித்து வருவது. உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் தமிழரின் வாழ்விடங்களில் இன்னமும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் சிங்கள இராணுவ முகாம்களால் கடற்றொழில்,நெற்செய்கை உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் முடக்கப்பட்டிருப்பது உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஐ.நா சிறப்புத் தூதுவர் லக்டார் பிராக்மியிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் விளக்கம் அளிப்பார்கள் என்றும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசையை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையிலான வவுனியா, கிளிநொச்சிப் பிரகடனங்களும் ஐ.நா சிறப்புத் தூதரிடம் கையளிக்கப்படும் என்றும் தெரிகிறது.

## ராஜபக்ஷவின்...

41 வயதான இந்தப் பெண் தான் கற்பிட்டியைச் சேர்ந்தவர் என்று கூறினாலும் அவர் கொழும்பைச் சேர்ந்தவர் என இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதையடுத்து சிறிலங்காவின் முக்கிய அரசியல் தலைவர்களுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மகிந்த ராஜபக்ஷவும் சில பொதுக் கூட்டங்களை இரத்துச் செய்துள்ளதாகவும் சுதந்திரக் கட்சியினர் தெரிவித்தனர்.

## நோர்வே...

பாராளுமன்ற வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றமை எதிர்காலத்தில் நோர்வே நாட்டில் தமிழர்கள் அரசியலில் தடம் பதிப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (32)

## ஐ.நா.அமைதிப்...

அமைதி காக்கும் படையைக் கொண்டு யுத்தநிறுத்த கண்காணிப்பு நடவடிக்கைகளை சரியாகக் கொண்டு நடத்த முடியும் என்று ஐ.நா செயலாளருக்கு சந்திரிகா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட புதிய வெளியுறவு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவும் இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் பேசியுள்ளார்.

சந்திரிகாவின் இந்த அவசர கோரிக்கை குறித்து தான் கவனம் செலுத்துவதாக ஐ.நா செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக தான் ஐ.நா பிரதிநிதியொருவரை சிறிலங்காவுக்கு அனுப்புவதாக அவர் சந்திரிகாவுக்குத் தெரிவித்துள்ளதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் சில தினங்களில் தான் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு அமெரிக்கா வரும் போது இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்துடன் விரிவாக ஆராய்வதாகச் சந்திரிகா கூறியுள்ளார்.

## நுழைவாயில்...

திப்புத் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்காப் படையினர் நிறுவிவரும் காவல் அரண்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் மக்கள் துன்புறுத்தலுக்குள்ளாகும் நிலைமை பற்றியும் மற்றும் விடுதலைப்புலிப் போராளிகள் அரச தரப்பால் நடத்தப்படும் அல்லது நோக்கப்படும் விதம் பற்றியும் நாம் அவர்களுக்கு எடுத்துரைத்தோம்.

அத்துடன் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயில்களிலுள்ள இராணுவ காவலரண்களில் நிரந்தரமான கண்காணிப்பாளரை நிறுத்த வேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்துக்களை வெளியிட முனையும் வேளைகளில் மக்கள் சிறிலங்கா இராணுவத்தால் பழிவாங்கப்படும் நிலை தோன்றியுள்ளதால் அச்சத்தால் எங்களிடம் மக்கள் முறைப்பாடுகளைச் செய்கின்றனர். அத்துடன் "யுத்தம் தொடங்கினால் உங்களை ஒரு கை பார்ப்போம்" என சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அச்சுறுத்தி வருவதாகவும், எங்களிடம் முறையிடும் நிலையில் அது தொடர்பாகக் கவனம் எடுக்கு மாறும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் விளக்கியுள்ளதோடு, அரச படைக்கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் சந்திப்புக்களுக்கு விசேட அதிரடிப் படையினர் மறைமுகமாகவும், நேரடியாகவும் குழப்பம் விளைவித்து வருகின்றனர். இது பற்றியும் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளோம்.

தற்போது விடுதலைப்புலிகள் கண்ணியமான முறையில் கடைப்பிடித்து வரும் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசியல் சந்திப்புக்களை மேற்கொள்கின்ற போது படைத்தரப்புக்கு பாதகமான நிலை ஏற்பட்டால் அதை உத்தியோக பூர்வமாக புலிகளின் சமாதான செயலகத்துக்கு இதுவரை அறிவிக்காதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளோம்.

ஒட்டுப்படைகளின் இருப்பும், அவர்களின் ஆயுதச் செயற்பாடுகளும் தான் தற்போதைய அமைதி முயற்சிகளின் முக்கிய எதிரிகள் என்பதை பன்நாட்டு சமூகத்துக்கு உணர்த்தும் முழுப் பொறுப்பும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கே உள்ளது என்பதை வலியுறுத்தினோம். அதேவேளை இது தொடர்பான எமது வினாக்கள் அனைத்துக்கும் பதில் அளித்ததுடன் மீண்டும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் கண்காணிப்புக் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர் என்றார் இளந்திரையன்.

## சந்திரிகாவின்...

பயங்கரவாதம், தீவிரவாதம் ஆகிய பிரிவினைவாதம் மூன்று பேய்களையும் எதிர்த்துப் போராடுவது என்றும் இவற்றை ஒடுக்க பிரதேச மற்றும் சர்வதேச அளவில் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வது என்றும் இருதரப்பும் முடிவு செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்வான் விடுதலைக்கான நடவடிக்கைகள் எந்த வடிவில் மேற்கொள்ளப்பட்டாலும் சிறிலங்கா அதைக் கடுமையாக எதிர்க்கும் என்றும் சீனாவின் இறையாண்மையைப் பாதுகாக்க சிறிலங்கா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் சனாதிபதி சந்திரிகா உறுதியளித்தார்.

சிறிலங்காவின் அம்பாந்தோட்டைத் திட்டம், நுரைச்சோலை அனல் மின் திட்டம், கட்டுநாயக்காவிற்கும் இரத்மலானைக்கும் இடையேயான விரைவு தொடருந்து சேவை, கொழும்பு கட்டுநாயக்க விரிவாக்கம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள சீனாவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்யுமாறும் சீன அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த வேண்டுகோளை சீனாவும் ஏற்றுக்கொண்டு உரிய நிதி உதவி உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் செய்வதாக வாக்குறுதி அளித்தது.

சிறிலங்கா சனாதிபதியின் இந்தப் பயணத்தில் கலாச்சாரம், பொருளாதாரம், சுற்றுலா உள்ளிட்ட துறைகள் தொடர்பாக எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வீரவணக்கம்

பிறப்பு
23 - 11 - 1977

வீரச்சாவு
30 - 08 - 2005



## லெப். கேணல்
# முரளிதரன்/நிருஜன்

-தர்மபாலன் கஜரூபன்-

புளியங்குளம் வீதி, நெடுங்கேணி.

அரசியல்துறை